விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 002 வள்ளுவர் ஆண்டு 2055 மார்கழி 06 சனிக்கிழமை (21.12.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே


வலம்புரியின் வெள்ளி விழாக் கொண்டாட்டம் நேற்று நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் நடைபெற்றபோது...

## புத்தாண்டுக்கு முன் உள்ளூராட்சித் தேர்தல்

### ஜனாதிபதி அநுர



(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் எதிர்வரும் வருடம் சித்திரைத் தமிழ் சிங்களப் புத்தாண்டிற்கு முன்னதாக நடத்தப்படும் என ஜனாதிபதி அநுர 15

### முன்னாள் பிரதி பொலிஸ்மா அதிபர்

# வாஸ் குணவர்த்தன உள்ளிட்ட ஐவருக்கு மரண தண்டனை

(கொழும்பு)

தொழிலதிபர் முகமது ஷியாம் கொலை தொடர்பில் முன்னாள் பிரதி பொலிஸ்மா அதிபர் வாஸ் குணவர்த்தன உள்ளிட்ட ஐந்து பிரதிவாதிகளுக்கு கொழும்பு மேல் நீதிமன்றத்தின் மூவரடங்கிய அமர்வு விதித்த மரண தண்டனையை உயர் நீதிமன்றம் உறுதி செய்துள்ளதாகப் பிரதிவாதிகளுக்கு கொழும்பு மேல் நீதிமன்றில் நேற்று அறிவிக்கப்பட்டது. (16ஆம் பக்கம் பார்க்க)



## 13ஆம் திருத்தம் அரசியலமைப்பில் உட்படும்

### அமைச்சர் விஜித

(கொழும்பு)

13ஆம் திருத்தம் புதிய அரசியலமைப்பில் உள்ளடக்கப்படும் என அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் இந்திய விஜயம் தொடர்பில் அறிவிப்பதற்காக 15

## சுற்றுலாவுக்கான பட்டியல்

### இலங்கை 3ம் இடம்

(கொழும்பு)

2025ஆம் ஆண்டில் சுற்றுலாப்பயணிகள் பயணிப்பதற்கான நாடுகளின் பட்டியலில் இலங்கை மூன்றாம் இடத்தில் தரப்படுத்தப்பட்டுள்ளது.

சீ.என்.ட்ரெவலர் வெளியிட்டுள்ள புதிய அறிக்கைக்கு அமைய 15


## இலங்கை அபிவிருத்தியடைந்த நாடாக மாற்றமடைய வேண்டும்

### அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங்

(கொழும்பு)

இலங்கை அபிவிருத்தியடைந்த நாடாக மாற்றமடைய வேண்டும் என அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் 15



## விவசாயப் பொருட்களுக்கு 10 சதவீத கழிவு அறவீடு

### ஜனவரி முதல் நீக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

விவசாய உற்பத்திப் பொருட்களுக்கு சந்தைகளில் பத்து சதவீதக் கழிவு அறவிடும் நடைமுறை அடுத்த ஆண்டு ஜனவரியிலிருந்து முழுமையாக ஒழிக்கப்பட வேண்டும்.

அதற்குரிய நடவடிக்கை எடுக்குமாறு வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளருக்குப் பணித்துள்ளேன். 15

## யாழ்.மண்கும்பானில் மோ.சைக்கிள் விபத்து

### இளைஞன் ஸ்தலத்தில் பலி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மண்கும்பான் பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞன் ஒருவர் ஸ்தலத்தில் உயிரிழந்துள்ளார்.

மண்டைதீவு பகுதியைச் சேர்ந்த 21 வயதுடைய அன்ரனி பிரான்சிஸ் நிலோஜன் என்பவரே 15

### அரச நிறுவனத்தில் நியாயமான

## சேவையை பெற முடியுமென மக்களுக்கு நம்பிக்கையில்லை

### ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

அரச நிறுவனசேவையைப் பெறுக் கொள்ள முடியும் என்று மக்களுக்கு சிறுதும் நம்பிக்கையில்லை என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்தார்.

நாரஹேன்பிட்டி 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

உ

திருச்சிற்றம்பலம்

# மார்கழிப் பெருவிழா

## மார்கழித் திங்கள் 10 ஆம் நாள் (டிச 25) - 2024



இடம் - யாழ்ப்பாண கலாசார மண்டபம்

காலம் - காலை 9.30 மணி முதல் மாலை 5.00 மணி வரை



## திருமுறைகள் நகர்வலம்

(காலை 8.30 மணி முதல் 9.30 மணி வரை)

வண்ணை வைத்தீசுவரன்
திருக்கோயில் வழிபாட்டைத் தொடர்ந்து,
திருக்கோயில் வாயிலிலிருந்து
யாழ்ப்பாண கலாசார மண்டபம் வரை

தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி

திருச்சிற்றம்பலம்

தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமட
சைவ மாணவர் சபை நடாத்தும்

# மார்கழிப் பெருவிழா

தென்னாடு

தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமட சைவ மாணவர் சபை நடாத்தும் மார்கழிப் பெருவிழா இம்முறை மேழ விழுகம்ப ஊழி ஆண்டு 2298 (2024) மார்கழித் திங்கள் 10ஆம் நாள் (டிச 25) புதன்கிழமை, யாழ்ப்பாணம் கலாசார மண்டபத்தில் நடாத்தத் திருவருள் கூட்டியுள்ளது.

## மார்கழித் திங்கள் 10 ஆம் நாள் (டிசம்பர் 25) புதன்கிழமை

காலை 8.30 மணியளவில் வண்ணை வைத்தீசுவரன் திருக்கோயில் வழிபாட்டை தொடர்ந்து திருக்கோயில் வாயிலிலிருந்து யாழ்ப்பாண கலாசார மண்டபம் வரை யானை மீது திருமுறைகள் நகர்வலம் இடம்பெற்று அரங்கங்கள் ஆரம்பமாகும்

## காலை அரங்கம் - தில்லைக்கூத்தன் திருவம்பலம்

(காலை 9. 30 மணி தொடக்கம் 12.50 மணி வரை)

9.30 மணி - திருவிளக்கேற்றலும் அம்பலவாணர் அருள்வழிபாடும்
(சிவத்திரு. தனியொளிசிவம் அகரன் - செந்தமிழ் அருச்சுனைஞர்)

9.45 மணி - வரவேற்பு நடனம் - செல்வி. அன்கா அன்டன் கௌரிதாசன்
(யா/ மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி)

9.55 மணி - தொடக்க உரை - சிவத்திரு. நாகலிங்கம் வேதநாயகன்
(ஆளுநர் - வட மாகாணம்)

10.00 மணி - அருளுரை - சீர்வளர்சீர் திருப்பெருந்தவத்திரு சாது சண்முக அடிகளார்
(குருமகா சந்நிதானம் - பழனி ஆதீனம்)

10.20 மணி - திருமுறை விண்ணப்பம் - கலாநிதி கிருபாசக்தி அம்மையார் குழுவினர்
(இசைத்துறை முதுநிலை விரிவுரையாளர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

10.40 மணி - தலைமை உரை - சிவத்திரு. சோமசுந்தரம் பிரகதீஸ்வரன்
(முதல்வர் - சிற்றி காட்வெயார், யாழ்ப்பாணம் )

10.50 மணி - வாழ்த்துரை - பேராசிரியர். சி. சிறிசற்குணராசா
(துணைவேந்தர் - யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

11.00 மணி - வாழ்த்துரை - சிவத்திரு. இலட்சுமணன் இளங்கோவன்
(பிரதம செயலாளர் - வட மாகாணம்)

11.05 மணி - தென்னாடு முதல்வர் உரை - சிவத்திரு. குணரத்தினம் பார்த்தீபன்

11.10 மணி - சிறப்புரை - 'திருநெறியத் தமிழ்' - முனைவர் கோ. ப. நல்லசிவம்
(தலைவர் மற்றும் இணைப் பேராசிரியர். மெய்யியல் துறை.
தமிழ்ப் பல்கலைக்கழகம் தஞ்சாவூர் )

12.40 மணி - கௌரவிப்பு நிகழ்வு - கொடையாளர்களை சிறப்புச் செய்யும் நிகழ்வு

அடியார் தமக்கு அமுது செய்விக்கும் நிகழ்வு - 12.50 முதல் 1.30 மணி வரை

(C-1866)

### மார்கழிப் பெருவிழா கொடையாளர்கள்

சிவத்திரு. தெய்வேந்திரம்பிள்ளை சிதம்பரகுமார்
சிவத்திரு. தெய்வநாயகம் சௌந்தராசா
சிவத்திரு. சோமசுந்தரம் பிரகதீஸ்வரன்
சிவத்திரு. நடராஜா ராஜ்குமார்
சிவத்திரு. சிவராசா சதீஸ்
சிவத்திரு. குலசேகரம் ஜெயராஜ்
சிவத்திரு. தனிகாசம்பிள்ளை நந்தனன்
சிவத்திரு. தியாகராஜா ஜெகசீலன்
சிவத்திரு. தயாநேசன் கர்ணன்
சிவத்திரு. தனலிங்கம் ஐங்கரன்
சிவத்திரு. பொன்னம்பலம் சிவபாலன்
சிவத்திரு. மகேந்திரன் கேதீஸ்வரன்

உ

திருச்சிற்றம்பலம்

# மார்கழிப் பெருவிழா

திருமுறையே சைவநெறிக் கருவூலம் தென்தமிழின் தேன்பாகு ஆகும்
திருமுறையே கயிலையின் கண் சிவபெருமான் செவிமடுத்த செந்தமிழ் வேதம்
திருமுறையே நடராசன் கரம் வருந்த எழுதியருள் தெய்வ நூலாம்
திருமுறையே சொக்கேசன் மதிமலிவாய் மலர்ந்தருளும் சிறப்பிற்றாமால்

## மாலை அரங்கம் - சேக்கிழார் அரங்கம்

(1.30 மணி முதல் 5.00 மணி வரை)

1.30 மணி - அருளுரை - தவத்திரு. வேலன் சுவாமிகள்
(ஆதீன முதல்வர் - சிவகுரு ஆதீனம் )

1.40 மணி - தலைமை உரை - சிவத்திரு. நல்லையா விஜயசுந்தரம்
(தலைமை ஆசிரியர் - வலம்புரி பத்திரிகை)

1.50 மணி - நாட்டிய அஞ்சலி - இணுவில் குமரநர்த்தனாலயம்

2.05 மணி - சிறப்புரை - 'அடியார் பெருமை' - சிவ. பழனிச்சாமி குமாரலிங்கம்
(செந்தமிழ் வேள்விச் சதுரர்)

2.50 மணி - சிறப்புரை - 'சங்கரன் தாள் மறவாமை பொருள்' - பேராசிரியர். ஸ்ரீ பிரசாந்தன
(தமிழ்த் துறை தலைவர் - பேராதனைப் பல்கலைக்கழகம்)

3.35 மணி - பட்டிமண்டபம் - இன்றைய இளையோரின் பத்திநெறியை வளர்ப்பதில் பெரிதும் பங்களிக்கும் சூழல் குடும்பமே! பாடசாலையே!

தலைமை - சிவத்திரு. சந்திரமௌலீசன் லலீசன்
(அதிபர் - கோப்பாய் ஆசிரியர் கலாசாலை)

4.35 மணி - 'மெய்கண்டார் விருது' வழங்கல் நிகழ்வு

4.55 மணி - திருவாசகப் பேச்சு மற்றும் கட்டுரைப் போட்டிக்கான பரிசில்கள் வழங்கல்
(சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம் அவர்களின் நினைவாக நடாத்தப்பட்டது)

4.50 மணி - நன்றியுரை - சிவத்திரு. வனராஜ் சசிராஜ்
(தலைவர் - சைவ மாணவர் சபை)

நிகழ்ச்சி முன்வைப்பு - சிவத்திரு. செந்தமிழாதன் (இளம்புலவர் - தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம்)

"மேன்மைகொள் சைவநீதி
விளங்குக உலகமெலாம்"

திருச்சிற்றம்பலம்

**தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம்,
கொக்குவில், யாழ்ப்பாணம்.
021 222 9722 / 070 770 1111**

### மார்கழிப் பெருவிழா கொடையாளர்கள்

சிவத்திரு. நவரத்தினம் தங்கேஸ்வரன்
சிவத்திரு. சர்வானந்தராஜா பரமநாதன்
மருத்துவர் சிவமகாலிங்கம் அரவிந்தன்
சிவத்திரு. குமாரசாமி கங்கைவேணியன்
தென்னாடு சிவமடம்

புளியங்கூடலைச் சேர்ந்த அமரர். இராஜேஸ்வரி பாலசந்திரன் பிரசாத் மற்றும் அமரர். பாஸ்கரன் பாலசந்திரன் பிரசாத் (எழுசன் கல்வி நிலையம்) அவர்கள் நினைவாக திரு. சதீ...

உ

திருச்சிற்றம்பலம்

# தென்னாடு
## அருள்மிகு ஐம்பூதநாதர் திருக்கோயில்



பாரிடை ஐந்தாய் பரந்தாய் போற்றி
நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி
தீயிடை மூன்றாய் திகழ்ந்தாய் போற்றி
வளியிடை இரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி
வெளியிடை ஒன்றாய் விளைந்தாய் போற்றி
அருக்கனில் சோதி அமைத்தாய் போற்றி
வெண்மதி தண்ணொளி தந்தாய் போற்றி
உயிருக்குள் உயிராய் நின்றாய் போற்றி
ஆதியும் அந்தமும் இல்லாய் போற்றி
ஐம்பூதநாதரே போற்றி போற்றி

அருளாளர்கள் வளவாளர்கள்




பிரதம விருந்தினர் | சிறப்பு விருந்தினர் | சிறப்பு விருந்தினர் | தலைமை உரை (காலை) | தலைமை உரை (மாலை)



பட்டி மண்டபம்

இன்றைய இளையோரின் பத்திநெறியை வளர்ப்பதில் பெரிதும் பங்களிக்கும் சூழல் குடும்பமே! பாடசாலையே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளி.மாவட்ட வைத்தியசாலையில் மலேரியா நோயுடன் ஒருவர் அனுமதி

(தருமபுரம்)

**கிளிநொச்சி மாவட்டத்தில் நேற்று முன்தினம் மலேரியா தொற்றுடன் ஒருவர் இனங்காணப் பட்டுள்ளார் என கிளிநொச்சி மாவட்ட தொற்று நோயாளர் வைத்தியர் நிமால் அருமைநாதன் தெரிவித்தார்**

இந்த மாதம் 12ஆம் திகதி ஆபிரிக்க நாடான கானாவிலிருந்து இங்கு வந்து காய்ச்சலுக்கு சிகிச்சை எடுத்த வேளை யிலே இவர் மலேரியா தொற்றுக்குள்ளான நிலை யில் அடையாளம் காணப் பட்டுள்ளார்.

தற்போது இலங்கை மலேரியா அற்ற நாடாக உலக சுகாதார தாபனத் தினால் கூறப்பட்டுள்ளது. ஆனால் எம்மை சுற்றி யுள்ள நாடுகளினால் எமக்கு ஆபத்துள்ளது.

மாலைதீவு தவிர்ந்த தூர கிழக்கு மற்றும் ஆபி ரிக்க தென்னாசிய நாடுக ளில் இன்னும் இக் காய்ச் சல் உள்ளது. எனவே இலங்கையிலிருந்து குறித்த நாடுகளுக்கு பயணம் செய் வோரின் எண்ணிக்கை யும் அதிகரித்து வருகிறது.

எனவே மக்கள் இவ் வாறான நாடுகளுக்கு சென்று வந்தால் காய்ச்சல் போன்ற அறிகுறிகள் காணப்பட்டால் மருத்து வரை உடனடியாக அணு குவதுடன் குறித்த நாடுக ளுக்கு சென்று வந்த விட யத்தையும் தெளிவு படுத்த வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். (நி-8- 316)

# புதிய அரசு நீதியை நிலைநாட்டும் நம்பிக்கை வெளியிட்ட கர்தினால்

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு குண்டு வெடிப்பில் பாதிக்கப்பட்டவர்க ளுக்கு உண்மையை வெளிக் கொணர்வதன் மூலம் புதிய அரசாங்கம் நீதியை நிலை நாட்டும் என்று நம்பிக்கை யுடன் இருப்பதாக கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் தெரிவித்துள்ளார்.

செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

உயிர்த்த ஞாயிறுத்தாக்குதல் தொடர்பான விசாரணைகளின் முன்னேற்றம் குறித்து அர சாங்கம் அவ்வப்போது தங்க ளுக்கு விளக்கமளிப்பதாக கர் தினால் தெரிவித்தார்.

மேலும் இந்தப் படுகொலை குறித்து அரசாங்கம் வெளிப் படையான விசாரணையை மேற்கொண்டு வருவதாகத் தெரிகிறது.

விசாரணைகளின் முன் னேற்றம் பற்றி அரசாங்கம், தம்முடன் நடத்திய உரையா டல்களில் இருந்து இது தெளி வாகிறது என்றும் அவர் குறிப் பிட்டுள்ளார்.

எனவே குற்றவாளிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்ப டுவார்கள் என்ற நம்பிக்கை தமக்கு இருப்பதாக கர்தினால் மீண்டும் வலியுறுத்தியுள் ளார். (நி-8)

# தனியார் பட்டப்படிப்பு நிறுவனங்களை ஒழுங்குபடுத்தும் வேலைத்திட்டம்

(கொழும்பு)

கல்விச் சீர்திருத்தங்க ளுக்கும் அப்பால் பரந்துபட்ட மாற்றமொன்றை மக்கள் கோருவதாகவும், தனியார் பட்டப்படிப்பு நிறுவனங் களை ஒழுங்குபடுத்துவதற் கான முறையான வேலைத் திட்டம் தேவை எனவும் பிரதமர் ஹரிணி அமர சூரிய தெரிவித்துள்ளார்

கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சுடன் இணைந்த நிறுவனங்களான ஆசிய ஆசிரியர் அபிவிருத்தி நிலையம், தேசிய கல்வி ஆணைக்குழு மற்றும் அரச சார்பற்ற உயர்கல்வி பிரிவு ஆகிய நிறுவனங்களின் சிரேஷ்ட அதிகாரிகளு டன் இடம்பெற்ற கலந்து ரையாடலின் போதே பிர தமர் இதனைத் தெரிவித் தார்.

பாடசாலைகளுக்கு இடை யிலான இடை வெளியை இல்லாமலாக்க வேண்டிய தன் அவசியத்தை சுட்டிக் காட்டிய பிரதமர், அதை தமது தொழிலையும் தாண்டிய ஒரு தேசியப் பொறுப்பாகக் கருதி செயற் படுமாறு அதிகாரிகளைக் கேட்டுக் கொண்டார்.


கன்னங்கரா அவர்க ளின் கல்விச் சீர்திருத்தங் களினால் ஏற்பட்ட கல்விப் புரட்சிக்கு அப்பால் விரி வான கல்வி மாற்றமொன்று தேவைப் படுவதாகவும், அதனை நிறைவேற்று வதற்கு தற்போதைய அர சாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்படுவதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

தேசிய கல்வி முகாமைத் துவ முறைமையின் அவசி யத்தை சுட்டிக்காட்டிய பிரத மர், எதிர்கால சந்ததியி னரை அனைத்து துறை களையும் உள்ளடக்கிய நவீன தொழிநுட்ப உல கிற்கு ஏற்றவாறு மாற்றி யமைக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி னார்.

மோசடியான பட்டப்படிப்பு நிறுவனங்களிடமிருந்து பிள்ளைகளைப் பாதுகாத் தல், அதற்கான சட்டக் கட்ட மைப்பு மற்றும் அரச சார்பற்ற உயர்கல்வி நிறுவ னங்களின் தரம் குறித்தும் இங்கு கவனம் செலுத்தப்பட் டது. (நி-8)

# ஆய்வுக்கப்பல்கள் தொடர்பில் ஆராய்ந்த பின்னரே அனுமதி

## அரசாங்கம் அறிவிப்பு



(கொழும்பு)

இந்தியா, சீனா உட்பட எந்த நாட்டிலிருந்து ஆய்வுக் கப்பல்கள் வருகை தந் தாலும் அவை தொடர்பில் ஆராய்ந்து பாதுகாப்பு தரப் பினரின் ஆலோசனை களுக்கமையவே அனும திக்க தீர்மானம் எடுக்கப் படும் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

அமைச்சரவை தீர்மா னங் களை அறி விக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாட்டில் அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த ஜய திஸ்ஸ இந்த விடயம் தொடர்பில் குறிப்பிட்டுள் ளார்.

ஆய்வுக் கப்பல்கள் குறி த்து இந்தியா மற்றும் சீனா ஆகிய இரு நாடுகளுடனும் இராஜ தந்திர ரீதிலேயே நகர்வுகளை முன்னெடுக் கின்றோம்.

இவ்வாரம் சீனாவின் மருத் துவ கப்பலொன்று இலங்கை வரவுள்ளது. அக் கப்பல் எமது சுகாதார துறைக்கு ஒத்துழைப்புக் களை வழங்கும் நோக்கி லேயே விஜயம் செய்யவுள் ளது. அதற்கு எவ்வித கட்டுப் பாடுகளும் விதிக்கப்படவி ல்லை.

ஆனால் ஆய்வுக் கப்பல்கள் வருகை தரும் போது அவை எந்த நாட்டு கப்பல்களானாலும் அது குறித்து நாம் ஆழமாக ஆராய்ந்த பின்னரே அனு மதி வழங்குவதா இல் லையா என்பதை தீர்மா னிப்போம்.

அது தொடர்பில் சம்பந்தப் பட்ட தரப்பினருடனுடன் கலந்துரையாடி விசார ணைகளை முன்னெடுத்து தீர்மானங்களை எடுப் போம்.

நீண்டகால இராஜதந்திர நோக்குடனேயே நாம் செயற்படுகின்றோம். ஆய்வுக் கப்பல் வருகை தொடர்பில் இதற்கு முன்னர் விதிக்கப் பட்டிருந்த தடை தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள் ளது.

எனவே ஆய்வுக் கப் பல்கள் வருவதற்கான நோக்கம் குறித்து தெளிவாக ஆராய்ந்த பின்னரே எந்த வொரு தீர்மானமும் எடுக் கப்படும். பாதுகாப்புத் தரப் பினரின் ஆலோசனைக் கமைய அதற்குரிய நடவடிக் கைகள் முன்னெடுக்கப்படும் என்றார். (நி-8)


## 31 ஆம் நாளில் நினைவு கூருகின்றோம்

எமது கழக அங்கத்தவர்களான
திருமதி உ.நித்திலகவதி
திருமதி.ம.உமாவதி
செல்வி.ச.பிருந்தாவதி
ஆகியோரின் அன்புத் தந்தையார்

அமரர்.

**ஆழ்வான் சதாசிவம்**



மலர்வு 10.04.1939 உதிர்வு 21.11.2024

அவர்கள் 21.11.2024 அன்று இறைபதமடைந்துவிட்டார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நாவற்காடு, குடமியன் கிராமிய தற்சார்பு வளர்ச்சிக்கழகம்-வரணி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இந்தியா- பாகிஸ்தான் போட்டி நிலவில் நடந்தாலும்

## மோதலை காண ரசிகர்கள் வருவார்கள்-பாக்-வீரர்



பாகிஸ்தானில் நடைபெறும் சம்பியன்ஸ் டிராபி போட்டியில் இந்தியா விளையாடும் போட்டி களை பொதுவான இடத்தில் நடத்த ஐசிசி அதிகார பூர்வமாக நேற்று முன்தினம் அறிவித் துள்ளது.

இதனால் பாகிஸ்தான்- இந்தியா இடையிலான போட்டி நடைபெறுவது உறுதியாகியுள் ளது.

ஐசிசியின் இந்த முடிவை பாகிஸ்தான் முன்னாள் வேகப் பந்து வீச்சாளர் முகமது அமிர் வரவேற்றுள்ளார்.

இது தொடர்பாக முகமது அமிர் கூறுகையில் "ஒரு கிரிக்கெட்ராக, இந்தியா- பாகிஸ்தான் போட்டி பொதுவான இடத்தில் நடை பெறும் என்ற அறிவிப்பை வர வேற்கிறேன். இந்தியா- பாகிஸ் தான் போட்டி நிலவில் நடை பெற்றாலும் கூட, ரசிகர்கள் அதற் கான வழியை கண்டுபிடிப்பார் கள்.

முக்கியத்துவம் போட்டியில் உள்ளது. போட்டி நடைபெறும் இடத்தில் உள்ளது. நான் மகிழ்ச் சியாக இருக்கிறேன்.

இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க மோதலைப் பார்க்க விரும்புவோர் அனைவரும் மகிழ்ச்சியாக இருப்பார்கள் என்று நான் நம்பு கிறேன்.

2031 வரையிலான போட் டியை ஐசிசி அறிவித்துள்ளது. ஆனால் 2025 சம்பியன்ஸ் டிராபிக்கான வேலையை இரண்டு மாதத்திற்கு முன்பு ஐசிசி தொடங்கியது ஏன்? ஐசிசியின் செயற்பாடு மிக மிக சோம்பே றித்தனமாக உள்ளது" என தெரிவித்தார். (6-8)

# சம்பியன்ஸ் டிராபி போட்டி சர்ச்சை முடிவுக்கு வந்தது




ஐசிசி இறுதியாக 2025 சம்பியன்ஸ் டிராபி முட்டுக்கட்டையில் ஒரு திருப்பு முனையை எட்டி யுள்ளது.

அதாவது உடன்பாட் டுக்கமைய, 2024-2027 ஐசிசி ஏற்பாட்டின் பின் பாகிஸ்தான் நடத் தும் போட்டிகளில் இந் தியா சம்பந்தப்பட்ட அனைத்து ஆட்டங்க ளும் நடுநிலை மைதா னத்தில் விளையாடப் படும்.

மேலும் இந்தியா நடத்தும் போட்டிகளில் பாகிஸ்தான் பங்கேற்கும் அனைத்து ஆட்டங் களும் நடுநிலை மைதானத்தில் விளையாடப்படும்.

இரண்டு நிகழ்வுகளிலும், அனைத்து போட்டிகளும் அரை யிறுதி மற்றும் இறுதிப் போட்டி போன்ற நாக் அவுட் விளையாட்டு களை உள்ளடக்கியதாக எடுத்துக் கொள்ளப்படுகிறது.

இந்த ஒப்பந்தம் 2025 ஆம் ஆண்டு பாகிஸ்தானில் நடை பெறும் ஆண்கள் சம்பியன்ஸ் டிராபியுடன் தொடங்குகிறது.

மேலும் இது 2025 ஆம் ஆண்டு இந்தியாவில் நடை பெறும் மகளிர் ஒருநாள் உலகக் கிண்ணம் மற்றும் 2026 ஆம் ஆண்டு இந்தியா மற்றும் இல ங்கை இணைந்து நடத்தும் ஆண்கள் ரி-20 உலகக் கிண் ணத்துக்கும் பொருந்தும்.

இதில், இந்தியாவும் பாகிஸ் தானும் விளையாடும் எந்த ஆட்டமும் இலங்கையில் நடை பெறும். அதேநேரம், ஒப்பந்தம் 2028 மகளிர் ரி-20 உலகக் கிண்ணத்துக்கும் பொருந்தும். அதேவேளை நடுநிலையான இடத்தைத் தேர்ந்தெடுப்பது போட்டி நடத்துபவர்களால் தீர்மானிக்கப்படும். எனினும் அதற்கு ஐசிசி யின் அங்கீகாரத் தைப் பெற வேண்டும். (6-8)

# சம்பியனான ரியல் மாட்ரிட்




இன் டர் கான் டினென் டல் கோப்பை கால்பந்து தொடரில் ரியல் மாட்ரிட் அணி கோப் பையை வென்றது.

கட்டாரில் நடந்த "பிபா" இன் டர்கான்டினென்டல் கோப்பை கால்பந்து பைனலில் ஸ்பெயினின் ரியல் மாட்ரிட், மெக்சிகோவின் பச்சுகா அணிகள் மோதின. ஆட்டத்தின் 37 ஆவது நிமி டத்தில் ரியல் மாட்ரிட் அணியின் எம் பாப்பே ஒரு கோல் அடித் தார். முதல் பாதி முடிவில் ரியல் மாட்ரிட் அணி 1-0 என முன்னி லையில் இருந்தது.

இரண்டாவது பாதியிலும் அசத்திய ரியல் மாட்ரிட் அணிக்கு ரோட்ரிகோ (53 ஆவது நிமிடம்), வினிசியஸ் ஜூனியர் (84 ஆவது நிமிடம், "பெனால்டி") தலா ஒரு கோல் அடித்து கைகொடுத்தனர். கடைசி நிமிடம் வரை போராடிய பச்சுகா அணியினரால் ஒரு கோல் கூட அடிக்க முடிய வில்லை.

ஆட்டநேர முடிவில் ரியல் மாட்ரிட் அணி 3-0 என்ற கணக்கில் வெற்றி பெற்று, இத் தொடரில் முதன்முறையாக சம் பியன் பட்டத்தை கைப்பற்றி யது.

இது ரியல் மாட்ரிட் அணியின் தலைமைப் பயிற்சியாளர் கார்லோ அன்செலோட்டியின் பயிற்சியின் கீழ் வென்ற 15 ஆவது கோப்பை.

இதில் 5 "கிளப்" உலக கோப்பை (2014, 2016-18, 2022) அடங்கும். இதற்கு முன், முன்னாள் ஸ்பெயின் வீரர் மிகுவல் முனோஸ் (1960-1974) பயிற்சியின் கீழ் ரியல் மாட்ரிட் அணி 14 முறை கோப்பை வென் றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (6-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இழக்கும் அபாயத்தில் ரன்வல

(கொழும்பு)

முன்னாள் சபாநாயகர் அசோக ரன்வல தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இழக்க வாய்ப்புகள் இருப்பதாக தேசிய மக்கள் சக்தியின் சட்டத் தரணி அகலங்க உக்வத்த தெரிவித்துள்ளார்.

தனது கலாநிதி பட்ட சான்றிதழை சமர்ப்பிக்க தவறினால் இந்த நிலைமை ஏற்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார். ஊடக நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

தனது கல்வி தகமையை வெளிப்படுத்த நேரம் வழங்குமாறு அசோக ரன்வல கோரியுள்ளார். அதற்கமைய, அவருக்கு நேரம் வழங்கப்பட்டுள்ளது.

அதற்குள் அவர் தனது சான்றிதழ்களை சமர்ப்பிக்க வேண்டும். அவ்வாறு சமர்ப்பிக்கவில்லை என்றால் அவரது பாராளுமன்ற உறுப்பினர் பதவி பறிபோகும்.

முன்னாள் சபாநாயகர் அசோக ரன்வலவின் பட்டப் பின்படிப்பு தொடர்பில் ஏற்பட்ட சர்ச்சையை அடுத்து, அவர் பதவி விலகியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (நி-8)

## வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்
## ஆதனப் பெயர்மாற்றம்

**40/5, 40/6, இத்தியடி முதலிகோவில் 3 ஆம் ஒழுங்கை, வட்டாரம்-09**

வலிகாமம் மேற்கு பிரதேச சபை வட்டுக்கோட்டை உப அலுவலகம் எல்லைக்குட்பட்ட வட்டாரம் 09 இத்தியடி முதலிகோவில் 3 ஆம் ஒழுங்கை, இல: 40/5, 40/6 ஆகிய ஆதனம் எமது ஆதனவரிப் பதிவேட்டின் பிரகாரம் **"திருமதி பொன்னம்பலம் சிவபாக்கியம்"** என்றே காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை உள்ளடக்கிய முழு ஆதனத்தினை சுப்பிரமணியம் பொன்னம்பலம் பெண் சிவபாக்கியம் ஆகியவர் 13.06.1904ஆம் திகதி பிரசித்த நொத்தாரிசு ஆறுமுகம் சிவசிதம்பரப்பிள்ளை முகதாவில் நிறைவேற்றப்பட்ட 18844ஆம் இலக்க முதுசநன்கொடை உறுதிப்படியும், 21.04.1915ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட 25202ஆம் இலக்க அறுதி உறுதிப்படியும் குறித்த ஆதனம் தனது தந்தையாராகிய அம்பலவாணர் கிருட்டினபிள்ளை அல்லது கிருஷ்ணர் ஆகியவருக்கு சொந்தமாக இருந்ததென்றும் அவர் 1920ஆம் ஆண்டு தன்னையும் தனது சகோதரனான கிருட்டினப்பிள்ளை இராசேந்திரத்தையும் சட்டப்படியான வாரிசாக விட்டுச்சென்றார் என்றும் அதன்பின்பு 1935ஆம் ஆண்டு தனக்கு விவாகமானபோது சீதனம் எதுவும் தரப்படவில்லை என்றும் குறித்த ஆதனம் தனக்கும் கிருட்டினப்பிள்ளை இராசேந்திரத்திற்கும் முதுசமாகவும் சொரியலாகவும் இருந்து வந்தது என்றும் குறித்த கிருட்டினப்பிள்ளை இராசேந்திரம் விவாகம் முடிக்காது இருந்ததுடன் தற்போது அவர் உயிருடன் இருக்கிறாரோ அல்லவோ என்று தமக்கு ஒருவிடயமும் தெரியாது என்றும் குறித்த ஆதனத்தை 30 வருடங்களுக்கு மேலாக தன்னால் தங்கு தடையற்று ஆட்சிசெய்யப்பட்டு வந்தது எனவும் வெளிப்படுத்தி பிரசித்த நொத்தாரிசு மு.சபாநாதன் முகதாவில் 470/06.03.1978ஆம் இலக்கத்தில் வெளிப்படுத்தல் உறுதியொன்றை நிறைவேற்றியிருந்தார்.

குறித்த ஆதனத்தில் ஒரு பகுதியானது சின்னையா மார்க்கண்டு கைம்பெண் தேவராணி ஆகியவர் குறித்த 470ஆம் இலக்க உறுதி மூலம் தனது வளர்ப்புத்தாயாராகிய குறித்த பொன்னம்பலம் பெண் சிவபாக்கியம் ஆகியவருக்கு சொந்தமும் ஆட்சியும் உடையதாக இருந்ததென்றும் அவருக்கு சட்டரீதியாக குழந்தைகள் இல்லாதபடியாலும் வேறு உரித்தாளர்கள், மரணசாதன தத்துவக்காரர், உரிமைதத்துவக்காரர், சாட்டுதல்காரர் இல்லாதபடியாலும் தன்னையே அவர்களது ஒரே மகளாக வளர்த்து திருமணம் செய்து வைத்து தன்னுடனேயே அவர்கள் வாழ்ந்து வந்ததுடன் அவர்களது மரணச் செலவுகள் வரை சகல செலவுகளையும் தானே மேற்கொள்ளும் வண்ணம் நிகழ்ந்தமையால் அவர்களுக்கு சொந்தமும் உரித்துமான ஆதனத்திற்குத் தானே ஒரே உரித்தாளி எனவும் வெளிப்படுத்தி பிரசித்த நொத்தாரிசு மீ.பாக்கியநாதன் முகதாவில் 351/14.06.1988ஆம் இலக்கத்தில் வெளிப்படுத்தல் உறுதியொன்றை நிறைவேற்றியிருந்தார்.

சுப்பிரமணியம் சிறிராஜசிங்கமும் பெண் பரமேஸ்வரியும் ஆகியவர்கள் பிரசித்த நொத்தாரிசு மீ.பாக்கியநாதன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 843/19.02.1992 ஆம் இலக்க உறுதியால் குறித்த மார்க்கண்டு கைம்பெண் தேவராணி ஆகியவரிடமிருந்து குறித்த ஆதனத்தினை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்கள்.

குறித்த மார்க்கண்டு கைம்பெண் தேவராணி ஆகியவர் குறித்த 351ஆம் இலக்க வெளிப்படுத்தல் உறுதியின் பிரகாரம் குறித்த ஆதனத்திற்கு கிணறும் மற்றும் மேற்கெல்லைக் கிணற்றில் அரைவாசியும் இருந்ததென்றும் அதன்பின்னர் நிறைவேற்றப்பட்ட குறித்த 843ஆம் இலக்க உறுதியில் தவறுதலாக குறித்த விடயம் சேர்க்கப்படவில்லை என்றும் அதனைத் திருத்தி பிரசித்த நொத்தாரிசு வே.த.மு.கதிர்காமநாதன் முகதாவில் 2440/10.12.1994ஆம் இலக்கத்தில் திருத்தல் உறுதியொன்றை நிறைவேற்றியிருந்தார்.
இராமச்சந்திரன் சிவசுப்பிரமணியமும் பெண் கயல்விழியும் ஆகியவர்களுக்கு குறித்த ஆதனத்தை பிரசித்த நொத்தாரிசு த.மு.கதிர்காமநாதன் முகதாவில் 2441/10.12.1994ஆம் இலக்க உறுதியால் குறித்த சுப்பிரமணியம் சிறிராஜசிங்கமும் பெண் பரமேஸ்வரியும், சிறிராஜசிங்கம் குமாரராஜனும் ஆகியவர்கள் நிபந்தனையறுதியாக கட்டுப்படுத்தியிருந்தார்கள்

இராமச்சந்திரன் சிவசுப்பிரமணியமும் பெண் கயல்விழியும் ஆகியவர்கள் குறித்த ஆதனம் குறித்த 2441ஆம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட நிபந்தனையறுதி மூலம் தங்களில் 2ஆம் பேரின் தந்தையும், பிறரும் சேர்ந்து அக்காலத்தைய நாட்டுசூழ்நிலை காரணமாக நிபந்தனையறுதியாக எழுதித் தந்திருந்தார்கள் என்றும், அக்காலத்திலேயே நம்மை ஆட்சிபண்ணி தமதாக்கி கொள்ளவிட்டு விட்டு குறித்த ஆதனத்திலிருந்து அகன்று சென்றுவிட்டார்கள் என்றும், அக்காலம் தொடக்கம் தமது ஆதனமாக ஆண்டனுபவித்து வருகின்றார்கள் என்றும் குறித்த நிபந்தனை அறுதி உறுதியின் நிபந்தனைகளும் தமது ஆதனம் என்பதை காட்டி நிற்கின்றது என்றும் வெளிப்படுத்தி பிரசித்த நொத்தாரிசு வே.த.மு.கதிர்காமநாதன் முகதாவில் 9624/25.06.2008ஆம் இலக்கத்தில் வெளிப்படுத்தல் உறுதியொன்றை நிறைவேற்றியிருந்தார்கள். வரப்பிரதாசன் வசந்தநாதனும் பெண் சந்திரமதியும் ஆகியவர்கள் பிரசித்த நொத்தாரிசு வே.த.மு.கதிர்காமநாதன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 9625/25.06.2008 ஆம் இலக்க உறுதியால் குறித்த இராமச்சந்திரன் சிவசுப்பிரமணியமும் பெண் கயல்விழியும் ஆகியவர்களிடமிருந்து குறித்த ஆதனத்தில் ஒரு பகுதியினை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்கள்.

குறித்த வரப்பிரதாசன் வசந்தநாதனும், பெண் சந்திரமதியும் ஆகியவர்கள் ஆதனப்பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்கள். இவ் ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபணை தெரிவிப்பர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது வரப்பிரதாசன் வசந்தநாதனும் பெண் சந்திரமதியும் ஆகியவர்களுக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.


**செயலாளர்,**
**வலிகாமம் மேற்கு பிரதேச சபை.** (2789)

## பாராட்டு விழா

(யாழ்ப்பாணம்)

இணுவில் கலை இலக்கிய வட்டம் மற்றும் இணுவில் அறிவாலயம் நடத்தும் பேராசிரியர் கலாநிதி, கந்தையா ஸ்ரீகணேசனின் பாராட்டு விழா நிகழ்வு இன்று சனிக்கிழமை மாலை 3 மணிக்கு இணுவில் கந்தசுவாமி கோவில் முன்பாக உள்ள அறிவாலயம் மண்டபத்தில் பேராதனைப் பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் வ.மகேஸ்வரன் தலைமையில் இடம்பெறவுள்ளது. (6-8)

## துப்பாக்கியுடன் இளைஞன் கைது



(தருமபுரம்)

பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிளாலி பகுதியில் நாட்டு துப் பாக்கியுடன் 19 வயதான இளைஞர் ஒருவர் பளை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கையினை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (6-8-316)

# இராசிபலன்

21.12. 2024
மார்கழி 06, சனிக்கிழமை
சஷ்டி பிற்பகல் 3.03 மணிவரை

மகம் காலை 6.45 மணிவரை
சுபநேரம் -3.24-4.54 மணிவரை
இராகுகாலம் 9.24-10.54 மணிவரை

சந்திராஷ்டமம்
உத்தராடம்

வளவன்

**மேஷம்**
சுப நிகழ்வுகளில் கலந்துகொள்ள அழைப்புகள் வந்து சேரலாம், தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், வழிபாடு ஆனந்தம் தரும்.

**கடகம்**
கொடுத்த வாக்கை காப்பாற்றும் எண்ணம் உருவாகும், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், சுபசெய்திகள் வந்து சேரலாம்.

**துலாம்**
ஆடம்பரப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, பணவரவு இரு மடங்காகும் வாய்ப்புண்டு, திடீர் பயணங்களால் மகிழ்ச்சி கூடும், இயல்பான வாழ்வில் இன்பங்கள் கூடும்.

**மகரம்**
மனதில் இனம் புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையும், வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள்.

**ரிஷபம்**
தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும் நாள், எந்தக் காரியத்தையும் எளிதில் செய்து முடிப்பீர்கள்.

**சிம்மம்**
குடும்பப் பொறுப்புக்கள் கூடும் நாள், பெரிய மனிதர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்**
தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள்.

**கும்பம்**
இனிமையான அனுபவங்கள் ஏற்படலாம், குடும்பத்தினரிடையே அன்னியோன்னியம் அதிகரிக்கும், புதிய தொழில் வாய்ப்புக்கள் தேடி வரலாம், வருமானம் திருப்தி தரும்.

**மிதுனம்**
பாகப் பிரிவினைகள் சுமுகமாக முடியும், பொதுநல ஈடுபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், வம்பு வழக்குகளைச் சமாளித்து வளம் காணும் நாள்.

**கன்னி**
குடும்பத்தில் அனைவரையும் அனுசரித்துச் செல்வது நல்லது, ஊர்மாற்றம், இடமாற்றம் என்பன இடம்பெறலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**தனுசு**
எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள்.

**மீனம்**
செயற்பாடுகளில் உற்சாகம் கூடும், நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, சுவாரஷ்யம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், முயற்சிகள் கைகூடும்.


தான் அறிவாளி என்ற மமதையில் உள்ளவன் எதையும் கற்றுக்கொள்ள முடியாது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழகான மனிதரை உருவாக்குவோம்

(நேற்றைய தொடர்ச்சி...)

குப்பை கூளங்களை சேரவிடாமல் உடனடியாக வீட்டின் சுற்றுப்புறத்தைக் கூட்டி தூய்மையாக வைத்திருக்க எல்லோரும் இணைந்து செயற்பட வேண்டும். அப்போது அந்த வீட்டில் வாழுகின்ற அனைவரும் உடல் நலமும் உள நலமும் பெற்று அழகுடன் தோன்றுவார்கள். மண்ணையும் நீரையும் காற்றையும் தீயையும் வானத்தையும் மதித்து வழிபட்டு வாழும் பயிற்சி வீட்டுநிலையிலேயே கிடைத்துவிடும். 'நல்ல குடும்பம் ஒரு சிறந்த பல்கலைக்கழகம்' என்ற நமது முத்தோருடைய முதுமொழியும் நமக்குத் தெளிவாக விளங்கும். அடுத்து சமூகநிலையில் பலர் இணைந்து செயற்படுவது மிகவும் இன்றியமையாதது. அதனால் மக்கள் கூடி வாழும் ஊர்கள் புதுப்பொலிவு பெறும். வீடுகளின் புறச் சூழல்களையும் தெருவோரங்களையும் எல்லோரும் இணைந்து தூய்மை செய்ய வேண்டும். நிழல் தரு மரங்களை நாட்டிப் பேண வேண்டும். நடந்து செல்லும் வழிப்போக்கர் இதனால் மகிழ்ச்சி அடைவார். இன்னும் ஊரில் உள்ள திருக்கோவில் பொது மன்றங்கள், விளையாட்டுத் திடல்கள், பூங்காக்கள் விளைபொருள் தோட்டங்கள் என்பவற்றையும் ஊர் மக்கள் இணைந்து தூய்மையாகவும் அழகாகவும் வைத்திருக்க வேண்டும். ஊரெல்லாம் கூடி ஒரு தேர் இழுப்பது போன்று ஒற்றுமையாக செயற்படவேண்டும். பூங்காக்கள் அமைக்கும் போது அங்கு பொருத்தமான நிழல் தரு மரங்களை நாட்டலாம். ஆல், அரசு, வேம்பு, இத்தி, மலைவேம்பு போன்ற மரங்கள் நன்கு செழித்து வளர்ந்து பெரிய குடைபோல நிழல் பரப்பி நிற்கும். இம் மரங்களின் நிழலில் சிறுவர்கள் விளையாடுவது, பெரியவர்கள் அமர்ந்திருந்து உரையாடுவது நலம் செய்யும்.



ஊர் மக்கள் பொதுஇடங்களிலே கலை விழாக்களை நடத்துவது நன்று. அதனால் இலக்கியமும் கலையும் எல்லோருக்கும் சென்று சேரும். சிறுவர் முதல் முதியோர் வரை எல்லோரும் இத்தகைய கலை விழாக்களிலே பங்குகொள்ளும் போது பெருமகிழ்ச்சி அடைவார்கள். ஆடல், பாடல், பேச்சு, நடிப்பு என பல்வேறுபட்ட கலைப்பயிற்சிகளில் பலர் ஈடுபவர். ஊரை அழகுபடுத்தும் விருப்பம் எல்லோருக்கும் ஏற்படும். இதே போன்று ஊரிலுள்ள வழிபாட்டுத் தலங்களிலும் ஊர் மக்கள் ஒன்று கூடி வழிபாடு செய்யும் போது மனங்களில் மலர்ச்சி உண்டாகும். உள்ளத்திலுள்ள தனிமை உணர்வும் சலிப்பும் முற்றாக அகன்று விடும். பிறர்க்கு உதவி செய்ய வேண்டும் என்ற உணர்வு ஏற்படும். பொங்கல், மடை, திருவிழா போன்றவற்றில் எல்லோரும் இணைந்து செயற்படுவது நிறைவான மகிழ்வைத் தரும். பலரும் பகிர்ந்துண்ணும் நிலையில் அன்னதானம் உள்ளத்தைப் பண்படுத்தி உடலுக்குப் புதிய அழகைத் தரும்.

நாட்டு நிலையிலே பல நிறுவனங்கள் இலக்கியத்தையும் கலையையும் பேணும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளன. அவை கலை, இலக்கியப் பயிற்சிகளை நடத்தி எல்லோரையும் பங்கு கொள்ளச் செய்யலாம். இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழையும் வளர்க்கும் முயற்சியில் எல்லோரையும் ஈடுபடுத்தலாம். பண்பாட்டு நிலையான ஆடைகளைப் பற்றிய தெளிவை மக்களுக்கு அறிவுறுத்துவதற்கும் இப்பணி வாய்ப்பளிக்கும். அறநெறிப்பள்ளிகள், இலக்கிய மன்றங்கள், விளையாட்டு அரங்குகள், ஆடல ரங்குகள், அரும்பொருட்காட்சியகங்கள், மருத்துவ நிலையங்கள் என்பன நாடளாவிய நிலையில் அமைக்கப்பட்டு மக்களை ஒன்றிணைக்க வேண்டும்.

நிறைவாக இன்றைய மனிதனுடைய உள்ளத்து அழுத்தங்களை உடனடியாகக் களைவதற்கு மேலே சுட்டப்பட்ட மூன்று நிலைகளிலும் பணிகள் விரைவாக முன்னெடுக்கப்பட வேண்டும். குறிப்பாக இன்றைய இளைய தலைமுறையினரிடம் தோன்றியுள்ள விரைவான வாகன ஓட்டம் கட்டுப்படுத்தப்பட வேண்டும். இளமையின் ஆற்றலைப் பயன்படுத்தி அழகான செயற்பாடுகளில் அவர்களை இணைக்க வேண்டியுள்ளது. முதுமையின் பட்டறிவும் இளமையின் ஆற்றலும் சேர்ந்து இலக்கிய ஆர்வமும் கலையார்வமும் நிறைந்த மனிதர்கள் பலரை உருவாக்கலாம். சிலை வடிக்கும் சிற்பியைப் போலப் பொறுமையாகச் செயற்பட வேண்டிய வேளையிது. இயற்கையோடு இணைந்து நமது முன்னோர்களைப் போல மன மகிழ்ச்சியோடு வாழும் அழகான மனிதர்களை உருவாக்கும் பணி கடினமானதல்ல. மன முண்டானால் விரைவாகச் செயற்பட்டால் இது முடியும் என்பதில் ஐயமில்லை.

(முற்றும்...)

## வெள்ளிவிழா நாளில் வாழ்த்துவதில் அகமகிழ்வடைகின்றேன்



**"தெரிதலும் தேர்ந்து செயலும் ஒருதலையாச் சொல்லலும் வல்லது அமைச்சு"** என்னும் குறளுக்கு ஏற்றாற்போல் எதனையும் நன்கு ஆராய்ந்து அறிதலும் ஆராய்த பின்பே செய்தலும் எதனையும் சந்தேகத்திற்கு இடமில்லாமல் சொல்லுதலிலும் வல்லவனே வலம்புரியே வாழியவே என்று வாழ்த்திக்கொண்டு சில வரிகள்...

ஒரு இனத்தின், மொழியின் இருப்பையும் பொருளாதார,அரசியல் செயற்பாடுகளையும் தீர்மானிப்பதில் ஊடகத்துறை பெரிதும் பங்காற்றிவருவதை யாராலும் மறைக்கவோ, மறுக்கவோ முடியாது. அந்தவகையில் தமிழ் பிரதேசத்தில் தனது ஊடகப் பணியை "நடுவுநிலை தவறா நன்னெறிகாக்கும்" வகையில் மிகவும் சிறப்பாக மேற்கொண்டு இன்று வெள்ளி விழாக்காணும் வலம்புரி பத்திரிகை தமிழ்மக்களிற்கு கிடைத்த ஒரு வரப்பிரசாதம். செய்திகளை உடனுக்குடனும் செவ்வையாகவும் வழங்கும் வலம்புரியில் அத்தனை விடயங்களும் சிறப்பாக அமைந்தாலும் வாசகர்களை மிகவும் கவர்வது அதன் ஆசிரியர் தலையங்கமே! காலத்திற்கு உகந்தால் போல் அன்றைய தினத்திற்கு எது தேவையான விடயமோ அதனை மிகவும் இரசனையுடன் வடிவமைத்து ஆசிரியர் தலைப்பு வெளிவருவது வலம்புரி பத்திரிகையில் தான் என்றால் அது மிகையாகாது.


அதுமட்டுமல்ல சங்குநாதத்தின் அத்தனை விடயங்களும் சிறப்பாக அமைந்து வெளிவருவது இன்றும் என் வாசிப்புப்பழக்கத்திற்கு பெரும் உந்து சக்தியாக அமைந்துள்ளது. குறிப்பாக ஆலடிமாநாடு வியாசர் பதில்கள், கவிதைக்கலசம் பொருளாதார அரசியல் சமூக விழிப்புணர்வுக்காக அபிமன்யு வரையும் கட்டுரைகள், எமது தமிழ் மக்கள் அறிந்திருக்க வேண்டிய புராணக் கதைகள் உதாரணமாக அண்மைக்காலங்களில் வெளியிடப்பட்ட பொன்னியின் செல்வன் கடற்புறா போன்றன சிறப்பம்சமே. இவற்றிற்கு மேலாக சிறுவர்களின் வாசிப்புத்திறனை வளர்க்கும் பொருட்டு சிறுவர் அரங்கு போன்றவற்றை தன்னகத்தே கொண்டு சிறப்பாக வெளிவரும் வலம்புரி எனது எழுத்தாக்கத்திற்கும் உரமாக இருந்தது. எனது கட்டுரைகள்,கவிதைகள்,சிறுகதைகள் அத்தனைக்கும் களமமைத்துக் கொடுத்தது. அதற்கு இருமுறை வலம்புரியை சிரம்தாழ்த்தி வணங்குகின்றேன்

வலம்புரியின் ஓர் இரசிகனாக மட்டுமல்லாது அதன்மீது பற்றுதல் கொண்டவனாக வலம்புரி பல நூற்றாண்டுகள் கண்டு மேலும் பல்லாண்டுகள் அச்சு ஊடகப்பணியில் சிறந்து விளங்க வேண்டும். மேலும் சிறுகதை, எழுத்தாளர்கள் தொடர்கதை எழுத்தாளர்கள், கவிஞர்கள்,கட்டுரை எழுதுநர்கள் எனப் பல எழுத்தாளர்களை உருவாக்க களமமைத்துக் கொடுக்க வேண்டும். எமது தமிழின் இருப்பை நிலைநாட்ட தொடர்ந்து சிறப்புடன் வெளிவரவேண்டும் என வாழ்த்துவதோடு எல்லாம் வல்ல இறைவன் துணையுடன் சிறந்த முதற்தர தமிழ் பத்திரிகையாக வெற்றி நடைபோட இறையருள் வேண்டுகின்றேன்.

**எழுத்தாளரும் கவிஞருமான அரியாலையூர் யசிதீபன்**
**(குணரத்தினம் பிரதீபன்-பொருளியல் ஆசிரியர்)**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 25 ஆவது ஆண்டு நிறைவு வெள்ளிவிழாச் சிறப்பு மலர் - 2024



## தமிழ்பேசும் சமூகத்தின் விடி வெள்ளி

ஊடக தர்மமாகிய நடுவுநிலை என்கின்ற நன்னெறி காத்து இலங்கையின் வட புலத்திலிருந்து வெளிவரும் நாளிதழான "வலம்புரி" மக்களின் நம்பிக்கைக்குரிய ஊடகமாக கால்நூற்றாண்டு காலமாக வெளிவந்து கொண்டிருக்கும் சிறப்புக்குரியதாக விளங்குகின்றது. சமூகத்தின் கண்ணாடி போன்று செயற்பட்டுவரும் "வலம்புரி" செய்தி அறிக்கையிடலோடு மட்டும் தனது பணியைச் சுருக்கிக்கொள்ளாது, மக்களின் பிரச்சினைகளை உரியவேளைகளில் வெளிக்கொணர்ந்து அவற்றிற்குத் தீர்வுபெற்றுக்கொடுக்கும் மகோன்னத சமூகக்கடமையையும் ஆற்றி வருகின்றது.

அரசியல், பொருளாதாரம், கல்வி, கலை, கலாசாரம், ஆன்மிகம், சமூகம் என அனைத்துத் துறைகளிலுமுள்ள நிறைவு, குறைவுகளை அலசி ஆராயும் வலம்புரியின் தனித்துவமான ஆசிரியத் தலையங்கம் உலகின் கவனத்தை ஈர்த்துள்ளமை யாவரும் அறிந்ததே.

படித்தவர் முதல் பாமரர் வரை படிக்கும் பத்திரிகையாக இது விளங்கி வருகின்றது. அனைத்துத் தரப்பினரதும் அறிவுப்பசிக்கு தீனி போடுவதே அதற்கான காரணமாகும்.

"வலம்புரியின்" வார இறுதி மலரான "சங்குநாதம்" நல்லதொரு பல்சுவைக் கதம்பம். அதில் வெளிவரும் ஆலடிமாநாடு தொடக்கம் "சுகமான விடியல்" வரை அனைத்தும் வாசகர் எதிர்பார்ப்புப் போல் விரிந்து கிடக்கும் விடயங்கள். இவைதவிர நாளிதழில் வெளியாகும் கல்கியின் "பொன்னியின் செல்வன்" (காவியத்தொடர்), சிறுவர் அரங்கம், ஆசிரியர் பத்திக்கு மேல் தினம் வரும் "அறிஞர் மொழி", இராசிபலன், பேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை என அத்தனை விடயங்களும் மிகவும் பெறுமதியான, வாசகர் தேடி விரும்பிப்படிக்கும் பகுதிகளாகும்.

எமது நாட்டில் நடைபெறும் பொதுப்பரீட்சைகளான தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சை, க.பொ.த (சா/த), (உ/த) பரீட்சை தருணங்களில் "வலம்புரி" ஆற்றிவரும் கல்விப்பணி அளப்பரியது. மாதிரி வினாப் பத்திரங்களை அச்சிட்டு வருவது மாணவர்களுக்கு ஒரு வரப்பிரசாதம். அதுமட்டுமல்ல தெளிவான அச்சுப்பதிப்பும், துல்லியமான புகைப்படங்களும், நியாயவிலையிலான விளம்பரங்களும், சிறப்பான பக்கவடிவமைப்பும் வலம்புரிக்கே தனித்துவமான அணிகலன்கள். இலாபத்தை மட்டும் நோக்காகக் கொண்டு செயற்படும் ஊடக வெளியில் சமூக நலனை முன்னிறுத்தி, சமூகசீர்திருத்தம் பேசி உண்மையை எடுத்துரைத்து நீதிக்காகப் போராடும் ஊடகமான "வலம்புரி" இன்று போல் இனிவருங்காலங்களிலும் கனதியான ஒரு செய்திப் பத்திரிகையாக வாசகர்களின் அபிமானத்தைப் பெற்று என்றும் நிலைக்கவேண்டும் என்று இந் நன்நாளில் வாழ்த்தி அமைகின்றேன்.

**எம்.ஷாந்தன் சத்தியகீர்த்தி,**
(MA, MEd, SLPS)
**ஆசிரியர் "காந்தீயம்"**

## வாழ்க வலம்புரி பல்லாண்டு காலம்

நடுவுநிலை தவறா நன்னெறிகாக்கும் நாளிதழ் என்ற மகுடவாசகத்திற்கு அமைவாக செய்திகளையும் மற்றைய ஆக்கங்களையும் வெளியிட்டுவரும் வலம்புரியானது மக்களால் மிகவும் விரும்பிப் படிக்கப்படும் ஒரு செய்தித்தாளாக விளங்குவது பெருமைப்படக்கூடிய ஒன்றாகும்.

ஆரம்ப காலத்தில் எவ்வளவோ இன்னல்களையும் இடையூறுகளையும் எதிர்கொண்டு வளர்ந்த எனது அபிமான வலம்புரியானது இப்போது இருபத்தைந்து ஆண்டுகள் நிறைந்து வெள்ளி விழாக்காணும் நிலையை எய்தியுள்ளமை கண்டு மிகவும் பேரானந்தம் அடைகின்றேன்.

சுருக்கமாகவும் நன்கு விளங்கிக் கொள்ளக் கூடிய வகையிலும் செய்திகளை வெளியிடும் ஒரே ஒரு பத்திரிகையாக வலம்புரி விளங்குவதால், மக்கள் அதனை விரும்பி, மனமுவந்து வாசிக்கின்றார்கள். இப்போது பெரும்பாலனவர்களின் கைகளில் வலம்புரியைக் காணக்கூடியதாக இருக்கின்றது. அச்சமின்றி துணிவோடு நியாயத்தைப் பிரதிபலிக்கும் வகையில் எழுதப்படும் ஆசிரிய தலையங்கத்தை அனைவரும் விரும்பிப் படிக்கின்றனர்.

டொக்டர் சிவன்சுதன், திருமதி விவியன் சத்தியசீலன் ஆகியோர் எழுதும் மருத்துவக்குறிப்புக்களையும் ஆலோசனைகளையும் முதியவர்கள் பலர் பயன்கருதி விரும்பிப் படிப்பதை அறியமுடிகிறது. கலாநிதி தவலிங்கம் எழுதும் எமது இலங்கை அரசியல் வரலாறுகள் இளைஞர்கள் முதல் அரசியல்வாதிகள் பலருக்கும் உதவக்கூடியதாய் அமைந்துள்ளன.

பலர் பொன்னியின் செல்வன் தொடர் கதையைத் தவறாது தேடிப்படிக்கும் நிலையையும் காணக்கூடியதாக உள்ளது. வளவனின் சோதிட இராசிபலன்களையும் விரும்பி வாசிக்கின்றார்கள். ஏனைய ஆக்கங்களும் காலத்திற்கேற்றனவாகவே அமைந்துள்ளன.

வலம்புரியின் சங்குநாதப் பகுதியில் அனைவரும் ஆலடிமாநாட்டையும் அவதானிக்கின்றனர். அந்த வகையில் மேலும் வளர்ச்சி பெற்று பல்லாண்டு காலம் வளம்பெற்று வாழ இந்த வெள்ளிவிழாவில் எனது மனப்பூர்வமான வாழ்த்தினைத் தெரிவித்துக் கொள்கின்றேன். வலம்புரி வளமுடன் பல்லாண்டு காலம் வாழ்க.

**மதிவாணர் செ.மதுசூதனன்.**
**கோண்டாவில் கிழக்கு.**




## வலம்புரி - சங்குநாதம் காண்போம்

கல்வியின் பயன் சிவஞானத்தெளிவு பெறல். செல்வத்தின் பயன் அன்பின் சிவப் பணியில் ஈடுபடல். வாழ்வின் பயன் தான் பெற்ற அனுபவ இன்பம் பகிர்தல்.

வலம்புரி தினப்பத்திரிகை ஆசிரியர் மற்றும் நிர்வாகக் குழுவினர், அச்சகக் குடும்பம் ஒன்று கூடித் தாங்கள் பெற்ற அன்பும் - இறைஅருளும் அனுபவ இன்பமும் இவ் வையகத்தோர் யாவரும் பெறுமாறு சீலமிகு குறிக்கோளுடைய பத்திரிகை அறிவியல் அணுகுமுறையில் "தானத்தில் சிறந்தது நிதானம்" ஆன்றோர் வாக்குக்கு அமைவாக நேர்மையுடன் ஈழத்திருநாட்டிலும் உலகறியவும் செய்ய நமது குல தெய்வம் ஈழத்துத் திண்ணபுரச் சிவனும் சிதம்பரத்தானும் நல்லூரான் அலங்காரனும் திருவருளைச் சிந்திப்போம்.ஓம் நமசிவாய

**க.கு.க.சிவபாலன்,**
போசகர், காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் மாணிக்கவாசகர் மடாலயம்.



## வலம்புரி நாளிதழே! வளமுடன் பல்லாண்டு வாழியவே


வலம்புரிக்கு பிறந்த நாள். புதிய ஆண்டில் காலடி எடுத்து வைக்கும் எங்களுடைய வலம்புரி நாளிதழ் சீரோடும் சிறப்போடும் வெளிவந்து நாட்டு மக்களுக்கு அளப்பரிய சேவையாற்ற வேண்டுமென்று உளமார வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

ஆன்மிக நெறியில் உண்மையாக நின்றுழைக்கும் "வலம்புரி" சங்குநாதம் எழுப்பி சர்வமங்களத்துடன் அஞ்சாது அழகாக மலர்ந்து அரசியல், விளம்பரம், கதை, கட்டுரை என்று தெளிவாக அச்சாகி வாசகர்களின் தேவையைப் பூர்த்தி செய்ய வேண்டுமென்று வாழ்த்தி மகிழ்கின்றோம்.

செய்திகளை அழகாக அச்சிடுவதில் வலம்புரிக்கு நிகர் வலம்புரிதான். ஒவ்வொரு நாளும் வலம்புரியை வாங்கி வாசிக்கும்போது ஒரு மனநிறைவு ஏற்படுகின்றது. ஆரம்ப நாள்முதல் இன்றுவரை தரம் குன்றாது வளமாக இயங்கவைக்கும் நிர்வாகத்தினரின், ஊழியர்களின் அளப்பரிய சேவை பாராட்டுக்குரியது.

வாழ்க ஆசிரியர்பீடம். எல்லாம் வல்ல வண்ணை ஸ்ரீ வெங்கடேசப் பெருமாள் திருவருளால் வலம்புரி எமக்கு நலம் புரிய தொடர்ந்து மிடுக்குடன் வெளிவர வேண்டும் என்று மனமார வாழ்த்துகின்றோம். "வலம்புரி நாளிதழே! வளமுடன் பல்லாண்டு வாழியவே!"

**கலாபூஷணம்**
**இராசையா ஸ்ரீதரன்.**



## தமிழ்ச் சமூகத்தை வழி நடத்தும் வலம்புரி

தமிழ்ச் சமூகத்தை நடுநிலையுடன் வழி நடத்தும் வலம்புரி நாளிதழின் 25 ஆவது அகவை நிறைவை ஒட்டி வெளிவரும் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்திகளை எழுதுவதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

இப்பத்திரிகை கடந்த காலங்களில் எதிர் கொண்ட பல இடர்பாடுகளைக் கடந்து வெற்றி நடை போடும் நிலையில், நிலைமைக்குத் தகுந்த படியான சிறந்த முகாமைத்துவம், பணியாளர்களின் அர்ப்பணிப்பான சேவை, வாசகர்களின் ஆதரவு, பத்திரிகைகளின் தரம் ஆகியவற்றால் வலம்புரி இன்றும் சிறப்பாக வெளிவந்து கொண்டிருப்பது மிகவும் பாராட்டுக்குரியது.


சமூகத்தின் சகல பிரிவினருக்கும் ஏற்ற விடயங்களைத் தாங்கி வரும் இப்பத்திரிகையின் ஆசிரிய தலையங்கங்கள் மிகவும் காத்திரமானவையாகவும் சர்வதேச பிரபல பத்திரிகைகளின் ஆசிரிய தலையங்கங்களின் தரத்திற்கு ஒத்ததாகவும் இருப்பதோடு சமூகத்தலைவர்களினதும் வாசகர்களினதும் கவன ஈர்ப்பைப் பெற்றதாகவும் விளங்குவது பாராட்டுதற்குரியது.

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட வலம்புரி பல தடைகளையும் பல சூழ்ச்சிகளையும் உடைத்தெறிந்து வெற்றிநடை போடுகிறது. நிதானம், அதன் சீர்மை தமிழ் மக்களின் காவலனாக வலம்புரி என்றும் சிரஞ்சீவியாக வாழ என் இதயபூர்வமான வாழ்த்துக்கள்.

**முருகேசு எசேக்கியேல்**
முன்னைநாள் சிரேஷ்டமேற்பார்வையாளர்,
ஆதார வைத்தியசாலை பருத்தித்துறை.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வலம்புரியின் வெள்ளி விழா

















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொண்டாட்டம்

25 YEARS ANNIVERSARY 1999 - 2024









நர்த்தன ஷேத்திரா மாணவிகளின் வரவேற்பு நடனம்






























Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக அமைதிக்கான தியானம் அறிவுத் திருக்கோவிலில்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச தியானத்தினம் இன்று சனிக்கிழமை உலகளாவிய ரீதியில் அனுஷ்டிக்கப்படவுள்ள நிலையில் யாழ். அறிவுத் திருக்கோவிலில் இன்று மாலை 4 மணிக்குவிசேட "உலக அமைதிகான தியானம்" நிகழ்வு இடம்பெறவுள்ளது. (6-8)

# வன்னி மாவட்ட முன்னாள் எம்.பியும் அவரது செயலாளரும் கைது

(குருமன்காடு)

வன்னி மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், முன் னாள் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைருமான கு.திலீபன் மற்றும் அவரது பிரத்தியேக செயலாளர் ஆகியோரை வவுனியா மாவட்ட நிதிமோசடி குற்றப் பிரிவு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

காசோலை நிதி மோசடி தொடர்பில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைருமான கு.திலீபன் பிரத்தியேக செயலாளரை காசோலை மோசடி தொடர்பில் நேற்று முன்தினம் மாலை மாவட்ட நிதிமோசடி குற்றப் பிரிவு பொலிஸார் கைது செய்தனர்.

அவரிடம் மேற்கொளப்பட்ட விசாரணைகளையடுத்து, ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் வன்னி மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கு.திலீபன் நேற்று காலை கைது செய்யப்பட்டார்.குறித்த இருவரையும் நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (6-8-250)

# வாயு துப்பாக்கியால் நாய் ஒன்று சுட்டுக்கொலை

## வவுனியாவில் சம்பவம்

(குருமன்காடு)

வவுனியா வைத்தியசாலையில் நாய் ஒன்று வாயு துப்பாக்கியால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளது.

வவுனியா வைத்தியசாலையில் கடமையாற்றும் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவரே நேற்று முன்தினம் இவ்வாறு சுட்டுக் கொலை செய்துள்ளார்.

வைத்தியசாலையின் பிரேத அறையருகில் நின்ற நாய் மீதே பாதுகாப்பு உத்தியோகத்தர் தன்னிடம் இருந்த வாயு துப்பாக்கியை பயன்படுத்தி சுட்டுள்ளதாக தெரியவருகிறது. இதனால் காயமடைந்த நாய் இரத்தம் சிந்தி இழுபட்டு சென்று வேலி ஓரமாக மரணித்துள்ளது. குறித்த சம்பவம் தொடர்பில் நாய் காப்பகம் ஒன்றை நடத்தி வருபவர் வைத்தியசாலை பணிப்பாளரிடம் நேற்று முறைப்பாடு செய்துள்ளார். இது குறித்த விசாரணை செய்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும்என பணிப்பாளர் இதன்போது உறுதியளித்துள்ளார். (6-8-250)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | நெல்லியடி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 500 | 600 | 600-700 | 600 |
| உருளைக்கிழங்கு | 240 | 230 | 200 | 260 |
| பச்சைமிளகாய் | 1500 | 1200 | 1300 | 900 |
| தக்காளி | 600 | 600 | 280 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 200 | 120-150 | 200 |
| கோவா | 350 | 250 | 250 | 300 |
| கரட் | 250 | 260 | 280 | 300 |
| பூசணி | 200 | 200 | 180 | 250 |
| புடோல் | 350 | 350 | 300 | 400 |
| வாழைக்காய் | 150 | 120 | 100-120 | 300 |
| சின்ன வெங்காயம் | 350 | 300 | 150-400 | 400 |
| பெரிய வெங்காயம் | 250 | 320 | 360 | 250 |
| பாகற்காய் | 1600 | 1600 | 1500 | 2000 |
| வெண்டக்காய் | 250 | 300 | 250 | 400 |
| கருணைக் கிழங்கு | 160 | 120 | 130 | 200 |
| பயற்றங்காய் | 800 | 900 | 700-900 | 700 |
| லீக்ஸ் | 380 | 350 | 350 | 400 |
| பீற்றூட் | 350 | 400 | 300 | 450 |
| கறிமிளகாய் | 800 | 800 | 650 | 800 |
| முருங்கைக்காய் | -- | 2500 | -- | -- |
| போஞ்சி | 650 | 450 | 550 | 500 |
| கத்தரிதம்புள்ள | 450 | 400 | -- | 500 |
| கீரை - 1 பிடி | 180 | 160 | 150-200 | 250 |
| தேசிக்காய் | 650 | 400 | 300-450 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 160 | 200 | 100-200 | 150-200 |
| இராசவள்ளி | -- | 850 | 750 | 1000 |
| வெங்காயப்பூ | -- | 700 | -- | -- |
| முள்ளங்கி | 240 | 250 | 120 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 140 | 100 | 80 |
| வல்லாரை | 60 | 70 | 100 | 100 |
| ஈரப்பலா | 100 | 80 | 80 | 200 |

# இன்று ஒரு தகவல் 187



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## பெரியோர் துணை

வீட்டிலே இருக்கிற பெரியவர்கள் பேச்சைக் கேள்! அவர்கள் சொல்கிறபடி நடந்து கொள்! என்று ஒரு இளைஞனுக்கு அறிவுரை சொன்னேன். அட போங்க சார்! அவர்கள் எல்லாம் அந்தக் காலத்திலே ஆசாமி. இந்தக் காலத்தைப் பற்றி அவர்களுக்கு என்ன தெரியும்? என்று என் அறிவுரையைத் தூக்கியெறிந்து விட்டான் அவன். அதற்கு பின்பு அவனை விடாப்பிடியாக உட்கார வைத்து நான் கேள்விப்பட்ட ஒரு கதையை அவனிடம் சொன்னேன். ஒரு பாரசீக மன்னன். அவன் தன்னுடைய பரிவாரங்களோடு இளைஞர்களையும் அழைத்துக்கொண்டு இஷ்தான்பூரில் இருந்து கப்பர் நாகப்பட்டினத்துக்குப் போனான். மொத்தம் ஏழு நாள் பாலைவனத்திலே பிரயாணம் செய்து அங்கே போய்ச் சேர வேண்டும். சரி அப்படி அந்த ஊரிலே என்ன விசேஷம் அந்த பாரசீக மன்னனுடைய தாத்தாவைப் புதைத்த இடம் அந்த ஊரிலே இருக்கிறதாம் தாத்தா இறந்த நூறாவது நாள் நினைவுச் சடங்கு அந்த ஊருக்குப் போய் நடத்த வேண்டியிருக்கு பாலைவனப் பகுதி என்றாலே இளைஞர்கள் மட்டும் தான் அந்தப் பயணத்திலே பங்கு எடுத்துக் கொள்ள வேண்டும். வயதானவர்கள் எல்லாம் வரக்கூடாது என்பது மன்னனுடைய கண்டிப்பான உத்தரவு.

அதனாலே மன்னன் தன்னுடைய பரிவாரங்களையும் இளைஞர்களையும் அழைத்துக் கொண்டு புறப்பட்டான். ஒரு நாள் பிரயாணம் முடிவதற்குள் பாலைவனப் புயல் பயங்கரமாக வீச ஆரம்பித்தது. புயல் என்றால் மிகவும் கடுமையான புயல்! ஒட்டகங்கள் எல்லாம் திசை மாறிப் போய்விட்டது. மன்னனும் வேறு சிலரும் வழி மாறிப் போய்விட்டார்கள். யார் யார் எங்கே இருக்கிறார்கள் என்றே தெரியவில்லை. தண்ணீர்த் தாகம் சில பேர் இறந்து போய் விட்டார்கள். மன்னனுக்கு என்ன செய்வது என்று புரியவில்லை. தண்ணீர் இல்லாமல் தாக்குப்பிடிக்க முடியவில்லை.

வயதிலே குறைந்த இளைஞன். மன்னா! தண்ணீர் இருக்கின்ற இடத்தை நான் சொல்கின்றேன். இங்கேயிருந்து தென் கிழக்குத் திசையிலே இரண்டு கல் தொலைவில் தண்ணீர் கிடைக்கும் என்றான். அவன் சொன்னதை நம்பி அவன் சொன்ன திசையிலே குறிப்பிட்ட தூரம் போய்ப் பார்த்தார்கள். பார்த்தால் அவன் சொன்னது மாதிரியே அங்கே தண்ணீர் இருந்தது. மன்னனுக்கு மிகவும் ஆச்சரியம். எப்படி தெரியும் உனக்கு இங்கே தண்ணீர் இருக்கின்றது என்று அந்த இளைஞனைப் பார்த்துக் கேட்டார்.

மன்னா என்னை மன்னிப்பதாக இருந்தால் நான் ஒரு உண்மையைச் சொல்கின்றேன். நான் ஒரு தவறு செய்து விட்டேன் என்றான். நீ எந்தத் தவறும் செய்திருக்க மாட்டாய் எங்களுக்கு தண்ணீர் கொடுத்து உயிரைக் காப்பாற்றியிருக்கின்றாய். உன்னை ஒன்றும் செய்ய மாட்டேன் சொல் என்றார் ராஜா.

பையன் மெதுவாக உண்மையைச் சொன்னான். மன்னா என்னுடைய தந்தை உங்கள் தாத்தாவின் 100ஆவது நினைவு நாளைப் பார்க்க வருவேன் என்று பிடிவாதம் செய்தார். நான் மறுத்தேன். வயதானவர்கள் எல்லாம் வரக்கூடாது என்பது ராஜாவினுடைய உத்தரவு என்று சொன்னேன். அவர் கேட்கவில்லை மிகவும் அடம் பிடித்தார். நான் பார்த்தேன். அவரை ஒரு சாக்குப் பையிலே போட்டு கட்டி ஒட்டகத்தின் மேலே சாப்பாட்டு மூட்டைகளோடு சேர்த்து வைத்துக் கொண்டேன். தண்ணீர் கஷ்டம் வந்த போது அவரிடம் சொன்னேன். அவர் தான் சாக்குப் பையிலே ஒரு ஓட்டை போடு என்றார். போட்டேன் அது வழியாகப் பார்த்துவிட்டு தான் தண்ணீர் இருக்கிற இடத்தைச் சொன்னார். அது எப்படி கண்டு பிடித்தீர்கள் என்று கேட்டேன். மாலை நேரத்திலே சிச்சிலி பறவைகள் தண்ணீர் குடித்துவிட்டு தான் தூங்கும். நான் சாக்குத்துவாரம் வழியாகப் பார்த்தபோது தென் கிழக்கு திசையிலிருந்து அந்தப் பறவைகள் பறந்து வந்தது தெரிந்தது. அதனாலே தான் அங்கே தண்ணீர் இருக்கும் என்று சொன்னேன் அப்படி என்றான் அந்த இளைஞன். மன்னன் உடனே அந்தப் பெரியவரை சாக்குப் பையிலே இருந்து வெளியே கொண்டு வந்தான்.

பெரியவர்கள் எப்போதுமே அனுபவசாலிகள். அவர்கள் துணையில்லாமல் பிரயாணம் போனது தவறு என்பதை புரிந்து கொண்டேன். நல்ல வேளை இந்தப் பெரியவர் இப்போது எங்களுடன் இருக்கிறார். இனி இவர் தான் எனக்கு அமைச்சர் என்றார்.

நினைவு நாளை நல்ல படியாகக் கொண்டாடிவிட்டு எல்லோரும் நாட்டுக்குப் திரும்பிவிட்டார்களாம். இந்தக் கதையை சொல்லிவிட்டு; அனுபவப் பாடசாலைகளில் படித்த முதியவர்களுக்கு மரியாதை கொடுக்க வேண்டும். அவர்களுடைய பேச்சைக் கேட்க வேண்டும் என்று என் எதிரிலே உட்கார்ந்திருந்த இளைஞனுக்குப் புத்திமதி சொன்னேன். சரி சார் இவ்வளவு தூரம் சொல்கிறீர்கள் ஏற்கனவே ஒரு பெரியவர் சொன்ன புத்திமதியைக் கேட்டுத் தான் நான் அவஸ்தைப் பட்டுக் கொண்டு இருக்கின்றேன் என்றான் அவன்!

என்ன புத்திமதி சொன்னார் அவர் என்றேன். உங்களிடம் வந்து புத்திமதி கேட்கச் சொன்னார் சார் அதனுடைய பலன் தான் இந்த ஐந்து நிமிட அவஷ்தை என்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# காட்சிப்படுத்தப்பட்டுள்ள வாகன இலக்கத் தகடுகள்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்கள தலைமை அலுவலகத்திலிருந்து கடந்த 12 ஆம் திகதி யாழ்.மாவட்ட அலுவலகத்திற்கு கிடைக்கப்பெற்ற வாகன இலக்கத்தகடுகளின் பட்டியல், யாழ்.மாவட்டத்திலுள்ள அனைத்து பிரதேச செயலகங்களிலும் மாவட்ட செயலகத்திலுள்ள மாவட்ட மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்திலும் பொதுமக்களின் பார்வைக்காக அறிவிப்புப் பலகையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் மாவட்டச் செயலக https://dmtappointments.dmt.gov.lk என்ற இணையத்தளத்தில் பிரவேசிப்பதன் ஊடாக அல்லது 021 211 7116 என்ற தன்னியக்க தொலைபேசி இலக்கத்தை அழைப்பதன் மூலம் திகதியையும் நேரத்தையும் முற்பதிவு செய்து, அதற்காக தங்கள் கைத்தொலைபேசிக்கு DMT ஆல் அனுப்பப்பட்ட குறுந்தகவலுடன் புதிதாக வாகனங்களைப் பதிவு செய்த உரிமையாளர்கள் வாகன பதிவுப்புத்தகம், தேசிய அடையாள அட்டை என்பவற்றையும் மாகாணங்களுக்கிடையே வாகன உரிமை மாற்றம் பெற்றவர்கள் மேற்குறித்த இரு ஆவணங்களுடன் பழைய வாகன இலக்கத்தகடுகள் மற்றும் வாகன இலக்கம் பொறித்த ஒட்டும் தாள் என்பவற்றையும் யாழ். மாவட்ட மோட்டார் வாகனப் போக்குவரத்து அலுவலகத்தில் குறிப்பிடப்பட்ட திகதியில் குறித்த நேரத்திற்கு சமர்ப்பித்து தங்கள் வாகனங்களுக்குரிய இலக்கத்தகடுகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

யாழ்.மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்கள உதவி ஆணையாளர் ஆர். சிவகரன் அறிவித்துள்ளார். (6-8)



புதுக்குடியிருப்பு பிரதேச வர்த்தகர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக வடக்கு மாகாண ஆளுநரினை நேற்று முன்தினம் ஆளுநர் செயலகத்தில் புதுக்குடியிருப்பு வர்த்தக சங்கத்தினர் சந்தித்து கலந்துரையாடினர். வர்த்தக சங்கத்தினரின் கோரிக்கைகளுக்கு இணங்க ஆளுநர், விரைவில் புதுக்குடியிருப்புக்கு விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளதாகத் தெரிவித்தார்.

# தொழிற்பயிற்சி கற்கைநெறி விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையானது 2025 ஆம் ஆண்டு முதலாம் அரையாண்டிற்கான முழு நேர கற்கைநெறிகள் எதிர்வரும் 01.01.2025 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில் அதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இக் கற்கை நெறிகள் யாழ்ப்பாணம், கைதடி, காரைநகர், வல்வெட்டித்துறை, பண்டத்தரிப்பு, சுன்னாகம் தொழிற்பயிற்சி நிலையங்களில் நடைபெறவுள்ளன.

தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியலாளர், மின்னிணைப்பாளர், கணிய அளவையியலாளர், விருந்தினர் வரவேற்பாளர், வெதுப்பாளர், சமையலாளர், நீர்க்குழாய் பொருத்துநர், மோட்டார் சைக்கிள் திருத்துநர், அலுமினியம் பொருத்துநர், கணனி வன்பொருள் திருத்துநர், கணனி படவடிமைப்பாளர், அறை பராமரிப்பாளர், உணவு மற்றும் குளிர்பானம் பரிமாறுபவர், குழந்தை பராமரிப்பாளர், பெண்கள் சிறுவர்களிற்கான ஆடை வடிவமைப்பாளர், சிகையலங்கரிப்பாளர், அழகுக் கலை வல்லுநர், முன்பள்ளி ஆசிரியர், விரைவு சேவை உணவு வழங்குநர், பெற்றோல் மற்றும் டீசல் வாகன இயந்திர திருத்துனர் போன்ற கற்கைநெறிகளிற்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளன.

இக்கற்கை நெறிகள் அனைத்தும் தேசிய தொழில் தகைமை மட்டம்-4 (NVQ-4) சான்றிதழுக்கான பயிற்சி நெறிகளாகும். கற்க விரும்புவோர் தங்கள் பதிவுகளை எதிர்வரும் 31.12.2024 ஆம் திகதிக்கு முன்னர் மாவட்ட அலுவலகம் 4ஆம் மாடி வீரசிங்கம் மண்டபம், இல 12. கே.கே. எஸ் வீதி யாழ்ப்பாணம் அல்லது அனைத்து தொழிற்பயிற்சி நிலையங்களிலும் மேற்கொள்ள முடியும்.

மேலதிக விபரங்களினைப் பெற்றுக்கொள்வதற்கு 021 222 7949 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும் என யாழ்.தொழிற்பயற்சி அதிகார சபை பிரதிப் பணிப்பாளர் கு.நிரஞ்சன் அறிவித்துள்ளார். (6-8)




### தனுப்பிரியா

காதல் என்பது சைக்கிளில போகின்ற மாதிரி பிடிக்கவில்லை என்றால் இறங்கி ஓடிடலாம்



கல்யாணம் என்பது கப்பலில் போகின்ற மாதிரி தப்பித்து எங்கும் போக முடியாது

### லதுசன்

சாப்பிட வாங்க என்று மனைவி கூப்பிடும்போது வராத பயம்... உங்களுக்கு பிடிச்சதை சமைச்சிருக்கிறேன் சாப்பிட வாங்க என்று கூப்பிடும் போது வந்து தொலையுது...



### யுகேசி

நமக்கு ஒன்றுமே தெரியாது என்று நமக்கு நன்றாக தெரியுது...



ஆனால் அடுத்தவங்கள் உனக்கு ஒன்றுமே தெரியாது என்று சொன்னால் பயங்கர கோபம் வருது ஏன்?

### தவப்பிரியா

பேட்டரி இல்லா செல்போன்கள் அமெரிக்க ஆய்வாளர்கள் அசத்தல்



அட சீக்கிரம் கொண்டு வாங்கப்பா சார்ஜ் போட்டு மாளல...

### கதிர்

வார வாரம் ஞாயிற்றுக்கிழமைக்காகவும்
மாதம் மாதம் சம்பள திகதிக்காகவும்
காத்திருந்தே வருஷம்
பூராவும் தொலைஞ்சிடுறோம்.



### நிதுசா

நான்: என்னம்மா குழம்பு இது..
அம்மா: கொள்ளு குழம்பு டா.
நான்: கொள்ளா, அது குதிரை அல்லவா தின்னும்
அம்மா: கழுதையும் தின்னலாம் ஒண்ணும் ஆகாது. மூடிட்டு தின்னு..



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 662





மாட்டேன் நான் அந்தக் குதிரை மேலேதான் ஏறி வருவேன் என்று சிறுவன் கூறிச் சுவர் மறைவில் நின்ற குதிரையைச் சுட்டிக் காட்டினான். அப்போதுதான் குதிரையையும் அதன் அருகில் நின்ற வந்தியத்தேவனையும் அவர்கள் கவனித்தார்கள்.

ரவிதாஸன் முகத்தில் வியப்பும் திகிலும் குரோதமும் கொழுந்து விட்டு எரிந்தன. இரண்டு அடி முன்னால் சென்று அடப்பாவி! நீ எப்படி இங்கே வந்தாய்? என்று கேட்டான்.

அட பிசாசே! கோடிக்கரையிலிருந்து நீ எப்படி இங்கே வந்தாய்? என்று கேட்டான் வந்தியத்தேவன். ரவிதாஸன் 'ஹா ஹா ஹா' என்று சிரித்தான். நீ என்னை உண்மையாகவே பிசாசு என்று நினைத்துக் கொண்டாயா?" என்று கேட்டான்.

சிலர் செத்துப்போன பிறகு பிசாசு ஆவார்கள். நீ உயிரோடிருக்கும் பிசாசு! என்றான் வந்தியத்தேவன். இதற்குள் சிறுவன் அவனோடு சண்டை போடாதே! அவனை எனக்கு ரொம்பப் பிடித்திருக்கிறது. இருட்டில் எனக்குத் துணையாயிருந்தான். புலி வந்தால் கொன்று விடுவதாகச் சொன்னான். அவனும் நம்மோடு வரட்டும்" என்றான்.

ரவிதாஸன் சிறுவன் அருகில் சென்று, "சக்கரவர்த்தி! அவசியம் அவனையும் அழைத்துப் போகலாம். தாங்கள் இன்றைக்கு ஒரு நாள் பல்லக்கில் ஏறிக் கொள்ளுங்கள்!" என்றான்.

சிறுவன் அவ்வாறே பல்லக்கை நோக்கிச் சென்றான்.

ரவிதாஸன் வந்தியத்தேவனை மறுபடியும் நெருங்கி, இப்போது என்ன செய்யப் போகிறாய்? என்று கேட்டான். "நீயல்லவா சொல்ல வேண்டும்?"

"எங்களுடன் வந்து விடு! எங்களுடைய இரகசியம் உனக்கு முன்னமே அதிகம் தெரியும். இப்போது இன்னும் அதிகமாகத் தெரியும். உன்னை விட்டுவிட்டு நாங்கள் போக முடியாது. வந்து விடு!" "உங்களுடன் நான் வர மறுத்தால்?"

"முடியாத காரியம் நீ பெரிய சூரன் என்பதை அறிவேன். ஆயினும் நாங்கள் இருபது பேர் இருக்கிறோம் எங்களிடமிருந்து தப்பி நீ போக முடியாது."

"உயிரோடு தப்ப முடியாது என்று தானே சொல்கிறாய்?" "நீ இளம் பிராயத்தவன். உலகத்தின் சுகங்கள் ஒன்றையும் அனுபவியாதவன். எதற்காக வீணுக்கு உயிரை விட வேண்டும்?"

வீணுக்கு யார்தான் உயிரை விடுவார்கள்? உங்களுடன் வரச் சொல்லுகிறாயே, எங்கே கூப்பிடுகிறாய்? நீங்கள் எங்கே போகிறீர்கள்?"

அப்படிக்கேள் சொல்லுகிறேன். பழுவூர் இளைய ராணியிடந்தான்!

ஓகோ! அப்படித்தான் நினைத்தேன். இளையராணி இன்று எங்கே இருக்கிறாள்? இளைய ராணி இத்தனை நேரம் திருப்புறம்பயத்துக்கு வந்திருப்பாள் நீ வருவாயா, மாட்டாயா?" நானும் அந்தப் பக்கந்தான் போக வேண்டும். வழிகாட்ட யாருமே இல்லையே என்று பார்த்தேன். நல்ல வேளையாக நீ வந்து சேர்ந்தாய்! போகலாம் வா!" என்றான் வந்தியத்தேவன்.

இதற்குள் சிறுவன் பல்லக்கில் ஏறிக்கொண்டான், பல்லக்கு நகர்ந்தது.

அதைச் சுற்றிலும் தீப்பந்தங்களைப் பிடித்துக் கொண்டு பல வித கோஷங்களை எழுப்பிக் கொண்டும் ரவிதாஸனுடைய கோஷ்டியார் சென்றார்கள்.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## மக்கள் நேர்மையானவர்களா?



ஒரு நாள் அக்பர், எனது அரசாட்சியில் மக்கள் நேர்மைக்கு எடுத்துக்காட்டாக இருப்பதைப் பற்றி உன்னுடைய கருத்து என்ன என்று பீர்பாலைக் கேட்டார்.

உடனே பீர்பால் இதற்கு நான் பதிலளிக்க வேண்டுமென்று தாங்கள் விரும்பினால் அரசே மக்கள் அனைவரையும் விருந்துக்கு வரச்சொல்லி அழைப்பு விடுங்கள். ஆனால் விருந்துக்கு வரும்போது ஒரு குடத்தில் பால் கொண்டு வர வேண்டும் என்று உத்தரவிட வேண்டும் என அக்பரிடம் வேண்டுகோள் வைத்தார்.

அக்பரின் ஆணைப்படி விருந்து பற்றி பொது மக்களுக்கு தெரிவிக்கப் பட்டது.

அரசர் அறிவித்த விருந்து நடைபெறும் நாளும் வந்தது. அக்பர், பீர்பால் உட்பட அரசவையில் முக்கியப் பதவிகளில் இருப்போர் அனைவரும் கூடியிருந்தனர்.

திடலின் பிரதான வாசலில் மிகப் பெரிய பாத்திரம் ஒன்று மூடி போட்டு வைக்கப்பட்டிருந்தது. மூடியில் ஒரு பெரிய ஓட்டை போடப்பட்டிருந்தது. பொதுமக்கள் அனைவரும் தாங்கள் கொண்டுவந்த பாலை மூடியிலிருந்த ஓட்டை வழியாகப் பாத்திரத்தில் ஊற்றி விட்டு அரசவைக்குள் நுழைந்தனர்.

அக்பர், பீர்பாலைப் பார்த்து நீ சொன்னபடி செய்தாகிவிட்டது. இவ்வளவு பாலையும் என்ன செய்யப் போகிறோம் என்று கேட்டார். உடனே பீர்பால் காவலர்களைப் பார்த்து பாத்திரத்தை மன்னருக்கு அருகில் கொண்டு வரச் சொன்னார்.

அக்பரிடம் பீர்பால் பால் மூடிவைத்திருக்கும் பாத்திரத்தின் மூடியை எடுத்துப் பார்க்கும்படி வேண்டினார். அதே போல் அக்பரும் மூடியை நீக்கி விட்டுப் பார்த்தார். பால் இருக்க வேண்டியப் பாத்திரத்தில் வெறும் தண்ணீர் மட்டும் இருந்ததைப் பார்த்து அதிர்ச்சியடைந்தார்.

ஆனால் இதை முன்பே எதிர்பார்த்த பீர்பால், மக்களின் நேர்மை பற்றி என்னிடம் நீங்கள் கேட்ட கேள்விக்கு இது தான் பதில் அரசே!

மற்றவர்கள் பால் கொண்டு வரட்டும். நாம் தண்ணீர் கொண்டு போய் பாத்திரத்தில் கொட்டினால் யார் கண்டுபிடிக்க முடியும் என்று ஒவ்வொருவரும் நினைத்துள்ளனர். எனவே தான் பாத்திரம் முழுதும் தண்ணீர் உள்ளது. உடன் இருப்பவர்களின் பேச்சைக் கேட்டு எந்த முடிவுக்கும் வந்து விடக் கூடாது அரசே என்று சிரித்தபடியே கூறினார். பீர்பாலின் அறிவுக் கூர்மையை எண்ணி வியந்து பாராட்டி பீர்பாலை தழுவிக்கொண்டார்.

நீதி : மற்றவர்கள் சொல்லும் கருத்தை அப்படியே ஏற்றுக் கொள்ளாமல் சோதித்துப் பார்க்க வேண்டும். பிறகு தான் கருத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> ஆக்கபூர்வமான கண்ணோட்டம் மற்றும் தெளிவான மனச்சாட்சியே சம நிலையான வாழ்வின் பிரதிபலிப்பு.
> – அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## கோரிக்கைகளை நிராகரிப்பதா? அரச அதிகாரிகளின் கடமை

எங்கள் வடபுலத்தின் பொருளாதாரம் உயர்வு பெற வேண்டுமாயின், நிர்வாகக் கட்டமைப்புகளில் கணிசமான மாற்றங்கள் ஏற்பட வேண்டும்.

ஆம், பொதுவில் அரச துறையின் பணியில் திருப்தியில்லாத நிலைமையை நம் மக்கள் உணர்கின்றனர்.

அதிலும் குறிப்பாக ஏழை மக்களின் வாழ்வியல் தொடர்பில் அரச நிர்வாகம் பாராமுகமாக இருப்பதை ஏற்றுத்தானாக வேண்டும்.

அண்மையில் கிளிநொச்சியில் நடந்த நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய வட மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் அவர்கள்; வட மாகாணத்திலுள்ள சில அதிகாரிகளுக்கு ஏழை மக்களின் குரல்கள் கேட்பதில்லை எனப் பகிரங்கமாகக் கூறியுள்ளார்.

உண்மையில் ஆளுநர் கூறிய மேற்படி விடயம் கூர்ந்து கவனிக்கப்பட வேண்டும்.

ஏனெனில், அதில் நிறைந்த உண்மை உண்டு.

பொதுவில் அதிகாரிகள் சிலர் மக்களின் கோரிக்கைகளை நிராகரிப்பதே தமது கடமை என்று நினைக்கின்றனர்.

ஆம், குடிசைக் கைத்தொழில், சிறு கைத்தொழில், வாழ்வாதார முயற்சிகளை முன்னெடுக்கும் நோக்கில் தேவையான அனுமதிகளைப் பெறுவதற்கு அரச நிர்வாகத்தை நாடும் போது, அங்கு உரிய வழிகாட்டல்களும் ஆலோசனைகளும் வழங்கப்படாமல் அவை உடனடியாகவே நிராகரிக்கப்படுகின்றன.

இதுதவிர, மக்களின் கோரிக்கைகள் அடங்கிய விண்ணப்பங்களில் பிழைகளைத் தேடிப்பிடிக்கின்ற பணியை மட்டும் செய்கின்ற அதிகாரிகளும் நம் மத்தியில் உள்ளனர்.

அதேபோல அரச உத்தியோகத்தர்களிலும் கணிசமானவர்கள் மக்களின் கோரிக்கைகளை நிராகரிப்பதையே தங்களின் அரச பணியாகக் கருதுகிறார்கள்.

இதனால் சாதாரண ஏழை மக்களால் எதுவும் செய்ய முடிவதில்லை. உதாரணத்துக்கு நம் வட மாகாணத்தில் ஏழை மக்கள் ஆரம்பித்த சிறுதொழில் முயற்சிகளுக்குப் பல்வேறு நிபந்தனைகளை விதிக்க, அந்த முயற்சிகளை மக்கள் கைவிட வேண்டியதாயிற்று.

உண்மை. தென்பகுதியிலிருந்து பொதி செய்யப்பட்டு இங்கு வருகின்ற சிற்றுண்டிகள், மிக்சர் வகைகள், வறுத்த கடலைகள் தொடர்பில் சுகாதாரப் பகுதியினரின் கண்காணிப்பு இடம்பெறுவதில்லை.

ஆனால், நம் மண்ணில் வாழுகின்ற மக்கள் செய்கின்ற சிற்றுண்டி வகைகளின் விடயத்தில் அதிதீவிரமான சோதனைகளுடன் நிபந்தனைகளும் விதிக்கப்படுகின்றன.

இதனால் நம் மக்கள் எதுவும் செய்ய முடியாமல் அந்த முயற்சியில் இருந்து வெளியேறுகின்றனர்.

இஃது ஒரு சிறு உதாரணம் மட்டுமே. இதற்கு மேலாக பலமான இறுக்கங்கள் எங்கள் மக்களின் முயற்சிகளை முற்றுப்பெறச் செய்வதாக உள்ளன.

ஆகவே இது விடயத்தில் நம்மிடம் மாற்றம் ஏற்பட வேண்டும். இல்லாவிடில் எல்லாமும் கடினமாகவே அமையும்.

# வடக்கு மீனவர்கள் பிரச்சினைகளை விரைந்து தீர்ப்பதற்கு நடவடிக்கை

## வடக்கு ஆளுநர் நா.வேதநாயகன்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்ந்து எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகளை கடற்றொழில் அமைச்சருக்கு பரிந்துரைக்கவுள்ளதாகவும் இவற்றை விரைந்து தீர்ப்பதற்கு எதிர்பார்ப்பதாகவும் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராயும் கலந்துரையாடல் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தலைமையில் நேற்று வெள்ளிக்கிழமை காலை இடம்பெற்றது.

ஆரம்ப உரையாற்றிய ஆளுநர், வடக்கு மாகாணத்தின் பிரதான பொருளாதார வளமாக விவசாயம் மற்றும் மீன்பிடி என்பன இருக்கின்றது எனவும் அந்தத் தொழிலை முன்னெடுப்பவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

மீனவ சமூகங்கள் பல பிரச்சினைகளை எதிர்கொள்வது தனக்குத் தெரியும் எனவும், அவை தொடர்பில் இந்தக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டு, கடற்றொழில் அமைச்சருக்குப் பரிந்துரைகள் அனுப்பி வைக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் குறிப்பிட்டார்.

அத்துடன் கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகரன் அவர்கள், வடக்கு மீனவர்களின் பிரச்சினை தொடர்பில் கூடுதல் அக்கறை செலுத்துவதாகவும் சுட்டிக்காட்டிய ஆளுநர், அவர் ஊடாக எதிர்காலத்தில் இங்கு அடையாளம் காணப்படும் விடயங்களைத் தீர்த்து வைக்க முடியும் என நம்புவதாகவும் குறிப்பிட்டார்.

வடக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்படும் கடலட்டைப் பண்ணைகள் தொடர்பில் பல்வேறு கருத்துக்கள் மீனவ சமூகப் பிரதிநிதிகளால் முன்வைக்கப்பட்டது. அதனால் ஏற்படும் கடல்வளப்பாதிப்பு மற்றும் ஏனைய தொழிலை முன்னெடுக்கும் மீனவர்கள் எதிர்கொள்ளும் பாதிப்பு உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டன.

இதேவேளை இது வரை வழங்கப்பட்ட அனுமதிகளின் அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ள பண்ணைகளை மீளாய்வு செய்வது மற்றும் ஒழுங்குபடுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான பரிந்துரையும் இங்கு முன்வைக்கப்பட்டது.

மேலும் வடக்கு மாகாணத்தின் சில பிரதேசங்களில் பாதுகாப்புத் தரப்பினர் பாஸ் நடைமுறைகளை பின்பற்றுவது தொடர்பிலும் மீனவ சமூகப் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டினர். மீனவர்களுக்கான ஓய்வூதியம் மற்றும் காப்புறுதி தொடர்பிலும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

இந்திய மீனவர்களின் அத்துமீறல்களால் எதிர்கொள்ளும் இழப்புக்கள் மற்றும் அவற்றுக்கு இழப்பீடுகள் வழங்கப்படாமை தொடர்பிலும் மீனவ சமூகப் பிரதிநிதிகள் தெரிவித்தனர். சட்டத்தால் தடைசெய்யப்பட்ட தொழில்முறைகளை முன்னெடுக்கும் மீனவர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்படுதில்லை எனவும், இதனால் கடல்வளம் அழிந்து செல்வதாகவும் மீனவ சமூகப் பிரதிநிதிகள் குறிப்பிட்டனர்.

கலந்துரையாடலின் இறுதியில் கருத்து வெளியிட்ட ஆளுநர், கடந்த காலங்களில் இங்கு எவ்வாறான விடயங்கள் நடைபெற்றன என்பது எல்லோருக்கும் தெரியும் என்றும் எதிர்காலத்தில் அவ்வாறான தவறுகள் நடைபெறாமல் இருக்க வேண்டும் எனவும் குறிப்பிட்டார். அத்துடன் எதிர்காலத்தில் இங்கு ஆராயப்பட்ட விடயங்களின் தொடர் நடவடிக்கைகள் தொடர்பில் மீண்டும் கலந்துரையாடுவதாகவும் தெரிவித்தார். (ம-7,33)

### நெடுந்தீவில் கைதான

## தமிழக மீனவர்களது விளக்கமறியல் நீடிப்பு

நெடுந்தீவு கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து மீன் பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில், கடந்த 8ஆம் திகதி கைது செய்யப்பட்ட 8 தமிழக கடற்தொழிலாளர்களின், விளக்கமறியலை எதிர்வரும் 27 ஆம் திகதி வரை ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்று நீடித்துள்ளது.

கடந்த 8ஆம் திகதி கைது செய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்ட கடற்தொழிலாளர்களின் வழக்கு நேற்றையதினம் வெள்ளிக்கிழமை ஊர்காவற்துறை நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது, கைது செய்யப்பட்ட 8 கடற்தொழிலாளர்களும், சிறைச்சாலை அதிகாரிகளால் ஊர்காவற்துறை நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டனர்.

அதனை அடுத்து அவர்களை எதிர்வரும் 27 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்துறை நீதிமன்றத்தின் பதில் நீதவான் சாளினி ஜெயபாலச்சந்திரன் உத்தரவிட்டுள்ளார். (ம-7,33)

## அமெரிக்க டொலருக்கான நாணய மாற்று விகிதம்

(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கி நேற்றைய நாளுக்கான (20.12.2024) நாணயமாற்று விகிதங்களை வெளியிட்டுள்ளது.

அதன்படி, அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 288.57 ஆகவும் விற்பனைப் பெறுமதி 297.33 ஆகவும் பதிவாகியுள்ளது.

ஸ்ரேலிங் பவுண் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 358.78 சதம் ஆகவும் விற்பனைப் பெறுமதி 372.86 ஆகவும் பதிவாகியுள்ளது.

யூரோ ஒன்றின் கொள்முதல் பெறுமதி 297.09 ஆகவும் விற்பனைப் பெறுமதி 310.06 ஆகவும் பதிவாகியுள்ளது.

கனேடிய டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 198.55 ஆகவும் விற்பனைப் பெறுமதி 207.38 ஆகவும் பதிவாகியுள்ளது.

அவுஸ்திரேலிய டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 177.76 ஆகவும் விற்பனைப் பெறுமதி 187.22 ஆகவும் பதிவாகியுள்ளது.

சிங்கப்பூர் டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 210.40 ஆகவும் விற்பனைப் பெறுமதி 220.36 ஆகவும் பதிவாகியுள்ளது. (ம-7)

## போதைப்பொருளுடன் திருமலையில் இருவர் கைது

(திருகோணமலை)

திருகோணமலை குச்சவெளிப் பகுதியில் குடும்பஸ்தர் இருவர் ஐஸ் போதைப்பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த கைது நடவடிக்கையானது திருகோணமலை பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவினரால் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சலப்பை ஆறு சுனாமி வீட்டுத்திட்டப் பகுதியில் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டதாகவும் அவரிடமிருந்து 1.530g ஹெரோயின் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபர் வழங்கிய தகவலை அடுத்து குச்சவெளிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நிலாவெளி இரக்ககண்டி பகுதியில் 5.190g ஹெரோயின் போதைப்பொருளுடன் மற்றுமொரு சந்தேக நபர் கைது செய்யப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இரண்டு சந்தேக நபர்களும் மேலதிக விசாரணைக்காக குச்சவெளிப் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுண்ணங்கிகளின் முக்கியத்துவத்தை உணர்த்திய கருத்தரங்கு!



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை, விவசாய பீடம்

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

எமது வாழ்வியலுடன் நுண்ணங்கிகளின் இயக்கமும் இன்றியமையாததாக ஆகிவிட்டது. நுண்ணங்கிகளின்றி எதுவும் நடைபெறாது என்னும் நிலையில் உலக இயக்கம் மாறிக்கொண்டிருக்கின்றது. நன்மை தரும் தீமை விளைவிக்கும் நுண்ணங்கிகள் அவற்றின் செயற்பாடுகள் அனைத்தும் எமது வாழ்க்கை முறையில் மிகவும் அத்தியாவசியமான உயிரிகளாக ஆகிவிட்டன.

இவைபற்றிய விழிப்புணர்வினை மேலும் ஏற்படுத்துவதற்காக இம்மாதம் 6ஆம், 7ஆம் திகதிகளில் இலங்கை நுண்ணங்கியியலாளர் சங்கத்தின் [Sri Lankan Society for Microbiologists] ஏற்பாட்டில் பதின்மூன்றாவது வருட நிகழ்வுகள் 6ஆம் திகதி யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உயர்பட்ட படிப்புகள் பீட மண்டபத்திலும் 7ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள ஜே ஹோட்டலிலும் இச்சங்கத்தின் தலைவரும் பேராதனை பல்கலைக்கழக மருத்துவபீட நுண்ணியியல் துறை வாழ்நாள் பேராசிரியர் வசந்தி தேவநேசம் அவர்களின் தலைமையில் சிறப்பாக நடைபெற்றன.

இலங்கை நுண்ணங்கியியலாளர் சங்கத்தின் யாழ்ப்பாணகிளையின் ஏற்பாட்டில் ஆறாம் திகதி நடைபெற்ற நிகழ்வுகளில் காலையில் மாணவர்களுக்கான நுண்ணுயிர் கொல்லி எதிர்ப்பு [Antimicrobial Resistance] பற்றிய விளக்கம் பல நிகழ்வுகள் மூலமாக அறிவுறுத்தப்பட்டன. நாம் அவசியமின்றி பயன்படுத்தும் நுண்ணுயிர்க்கொல்லிகள் பற்றியும் தகுந்த மருத்துவரின் ஆலோசனையின்றி இவ்வாறான நுண்ணுயிர்க்கொல்லிகளை பயன்படுத்தக் கூடாது என்பது பற்றியும் மாணவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டிருந்தது.

இதில் யாழ்ப்பாணத்திலுள்ள ஐம்பதுக்கும் அதிகமான பாடசாலைகளிலிருந்து நூற்றி ஐம்பது மாணவர்களும் ஐம்பது ஆசிரியர்களும் பலநிகழ்வுகளில் பங்குபற்றியுமிருந்தனர். மாணவர் குழுக்களுக்கிடையிலான போட்டிகளும் நடாத்தப் பட்டு பரிசுகளும் வழங்கப் பட்டது. நுண்ணுயிர்கொல்லி எதிர்ப்பு பற்றிய செய்திமடலும் வெளியிட்டு வைக்கப்பட்டது. நுண்ணுயிரெதிர்ப்பு மருந்து வகைகளின் மாதிரிகள் அனைவரதும் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

ஆறாம் திகதி காலையில் இலங்கை நுண்ணங்கியியலாளர் சங்க தலைவரின் அறிமுக உரையுடன் நுண்ணுயிர் கொல்லி எதிர்ப்பு பற்றி யாழ்ப்பாண பல்கலைக்கழக மருத்துவபீட பேராசிரியை கலாமதி முருகானந்தன் அவர்களது விளக்கவுரை சிறப்பாக மாணவர்களுக்கு வழங்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து மாணவர்களுக்கான போட்டி நிகழ்வுகள் நுண்ணுயிர்க்கொல்லி பயன்பாடு பற்றிய தனித்தனியான நிகழ்வுகளை மையப்படுத்தி வினாக்களுடன் அவர்களது குழுநாடகம் மூலம் விளக்கப்பட்டது. மாணவ, மாணவிகள் மிகவும் விருப்புடனும் ஆர்வத்துடனும் கலந்து கொண்டமையை காண முடிந்தது. அதனைத் தொடர்ந்து கிழக்கு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி வைதேகி பிரான்சிஸ் ரஜீவன் அவர்களினது "நுண்ணங்கி களும் மருந்துகளும் " பற்றிய சிறப்புரையைத் தொடர்ந்து காலை நிகழ்வு முடிவுக்கு வந்தது.

## இனியொரு பசுமைப்புரட்சிக்கு...



மாணவ, மாணவிகள் தமக்கிடையிலான நுண்ணங்கிகள் பற்றிய ஐயங்களை கேட்டு தெரிந்து கொண்டமை அனைவரினதும் கவனத்தையீர்த்தது.

மாலையில் நுண்ணுயிர் சூழகம் [Microbiome] பற்றிய கருத்தமர்வு மூவர்களின் விளக்கவுரையுடன் நடைபெற்றது. மனித சமிபாட்டுத்தொகுதி நுண்ணுயிர் சூழகம் பற்றி பேராதனைப் பல்கலைக்கழக மருத்துவபீட பேராசிரியை வஜிரா லியனபத்திரன அவர்களது விளக்கவுரையைத் தொடர்ந்து விலங்குகளில் நுண்ணுயிர்சூழகம் பற்றி பேராதனை பல்கலைக்கழக பேராசிரியை கலுப்பகான அவர்களும் அதனைத் தொடர்ந்து மண்ணில் நுண்ணுயிர்சூழகம் பற்றி பேராசிரியர் கு. மிகுந்தனும் விளக்கவுரையாற்றினர்.

இதனை வாழ்நாள் பேராசிரியை வசந்தி தேவநேசம் அவர்கள் நெறிப்படுத்தி இறுதியுரையையும் நடாத்தினார். நுண்ணுயிர்சூழகம் என்னும் கருத்து பலவிடங்களில் சரியான புரிதலின்றி தவறாக நுண்ணங்கிகளை மட்டும் குறிப்பிடுவதனை சிறந்த விளக்கங்களுடன் அதில் உரையாற்றியவர்கள் எடுத்துக் கூறினர். நுண்ணுயிர்சூழகம் பற்றிய கற்கை மற்றும் அறிவினை மேலும் விருத்தி செய்யும் வழிவகைகள் பற்றியும் கலந்தாராயப்பட்டது. நுண்ணங்கிகள் பற்றிய சிறந்த விளக்கத்தை மக்களுக்கும் மாணவர்களுக்கும் மேலும் பரப்புவதற்கான வழிவகைகளை இலங்கை நுண்ணங்கியலாளர்கள் சங்கத்தின் யாழ்ப்பாணக் கிளை எதிர்காலங்களில் ஏற்பாடு செய்யும் என எடுத்துரைக்கப்பட்டது.

ஏழாம் திகதி நடைபெற்ற வருடாந்த ஆய்வு மாநாட்டில் சிறப்பு பேச்சாளராக ஹெங்கொங் பல்கலைக்கழக வைரஸ் ஆய்வு நிபுணர் பேராசிரியர் ஜோசப் சிறியால் மலிக் பீரிஸ் அவர்கள் "உயிரியல்மருத்துவத்தில் செயற்கை நுண்ணறிவினது பங்களிப்பு" பற்றி உரையாற்றினார். கொவிட் வைரஸ் பற்றிய சிறப்பாய்வுகளை செய்த இவர் நுண்ணங்கியலில் சிறந்த புலமையாளராகவும் கடமையாற்றுகின்றார். இவரைத் தொடர்ந்து பேராதனைப் பல்கலைக்கழக இணைந்த மருத்துவ கற்கை பேராசிரியை சகீனா அவர்கள் "நுண்ணுயிர் கொல்லி எதிர்ப்பில் பன்முறை அலகுகளின் தாக்கம் " பற்றி சிறப்புரையாற்றினார்.

இவற்றைத் தொடர்ந்து மீண்டும் பேராசிரியர் மலிக் பீரிஸ் அவர்களது "உயிரியல் தொழில்நுட்பத்தின் இன்றையநிலை" பற்றிய சிறப்புரையும் நடைபெற்றது. மிகவும் ஆழமான சிறந்த விடயங்களுடன் இவ்வுரைகள் அமைந்திருந்தமை அனைவருக்கும் பயனுள்ளதாகவும் நுண்ணங்கியில் சார்ந்த பல வினாக்களுக்கு விடைகளை தந்ததாகவும் அமைந்தன.

இவ்வுரைகளுக்கிடையே ஆய்வாளர்களின் ஆய்வுக் கட்டுரைகளும் வாசிக்கப்பட்டன. நிகழ்வுகள் அனைத்தும் சிறப்பாக பயனுள்ளதாக நடைபெற்றமை இங்கே குறிப்பிடத்தக்கது.

இலங்கை நுண்ணங்கியலாளர்களின் சங்கத்தின் வருடாந்த நிகழ்வுகள் இவ்வருடம் பேராதனைக்கு வெளியே யாழ்ப்பாணத்தில் யாழ்ப்பாணக் கிளையின் ஏற்பாட்டுடன் நடைபெற்றமை சிறப்புக்குரியது. இதில் முக்கிய பங்காற்றிய கிளையின் தலைவி கலாநிதி திருமதி. த.திலீபன் மற்றும் செயலாளர் கலாநிதி திருமதி தேவகி ஞானகாருண்யன் மற்றும் ஏனைய உறுப்பினர்களின் பங்களிப்புக்கள் இந் நிகழ்வு களுக்கு உந்துகோலாக அமைந்தன.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திற்கு வெளியே இலங்கை நுண்ணங்கியியலாளர்கள் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந் நிகழ்வுகளுக்கு சிறந்த வரவேற்பு கிடைத்ததுடன் அதனது அனைத்து செயற்பாடுகளும் சிறப்பாக, தரமானவையாக நடைபெற்றிருக்கின்றன. இவ்வாறான பலவிற்பன்னர்கள் கலந்து சிறப்பிக்கும் நிகழ்வுகள் எதிர்காலத்தில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்று அதிலுள்ள அறிவுசார் விடயங்கள் எமது மக்களுக்கு கிடைக்க ஆவன செய்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை...

ஜூலி சங்கிற்கும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபாலவிற்கும் இடையில் சந்திப்பொன்று நடைபெற்றுள்ளது.

பத்தரமுல்ல சுஹுருபாயவில் உள்ள பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சில் நேற்று இந்தச் சந்திப்பு நடைபெற்றுள்ளது.

இந்தச் சந்திப்பில் பிரதி அமைச்சர் சுனில் வட்டகலவும் இணைந்து கொண்டார்.

இலங்கைக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளை வலுப்படுத்துவது குறித்து இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்பட்டது.

இலங்கையை அபிவிருத்தியடைந்த நாடாக மாற்றுவது அமெரிக்காவின் நம்பிக்கை எனவும், அரசாங்கத்தின் எதிர்கால அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு அமெரிக்கா ஆதரவு வழங்கும் எனவும் தூதுவர் இதன்போது குறிப்பிட்டுள்ளார்.

அரசியல் செல்வாக்கின்றி சட்டம், ஒழுங்கை நிலைநாட்டுவதற்கு புதிய அரசாங்கத்தின் முயற்சிகளைப் பாராட்டுவதாகவும் போதைப்பொருள் மற்றும் பாதாள உலகச் செயற்பாடுகளுக்கு எதிரான போராட்டத்திற்கு பூரண ஆதரவை வழங்குவதாகவும் அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் மேலும் தெரிவித்தார். (ம-7)

## விவசாயப்...

இந்த விடயத்தை நடைமுறைப் படுத்துவதற்கு வடக்கு மாகாண விவசாயத் திணைக்களமும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண விவசாய மற்றும் கமநல சேவைகள், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசன, மீன்பிடி, நீர் விநியோக மற்றும் சுற்றாடல் அமைச்சின் துறைசார் மீளாய்வுக் கூட்டம் ஆளுநர் செயலகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை மாலை ஆளுநர் தலைமையில் இடம்பெற்றது.

வடக்கு மாகாண விவசாயத்துறை மேம்பாட்டுக்காக வழங்கப்படும் உபகரணங்களை உச்ச அளவில் பயன்படுத்த வேண்டும் என வலியுறுத்திய ஆளுநர் அதன் ஊடாக ஏற்றுமதியை நோக்கி உற்பத்தியை அதிகரிக்க வேண்டும் எனவும் குறிப்பிட்டார். (ம-7,33)

## யாழ்.மண்...

இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மணக்கும்பான் - கறுப்பாச்சி அம்மன் கோவிலடிப் பகுதியில் நேற்று குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

ஊர்காவற்றுறை பகுதியிலிருந்து, யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த கார் மீது, பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் இந்த விபத்து சம்பவித்துள்ளது.

இதன்போது மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்ற சாரதி உயிரிழந்துள்ளதுடன், மோட்டார் சைக்கிளின் பின்னால் இருந்த இளைஞன் படுகாயமடைந்த நிலையில், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

காரின் பின்பக்கம் முற்றாக சேதமடைந்துள்ளதுடன், காரின் சாரதிக்கு காயங்கள் எவையும் ஏற்படவில்லை.

குறித்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை ஊர்காவற்றுறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,33)

## சேவையை...

பில் உள்ள "நில மெதுர" கட்டடத்தில் அமைந்துள்ள உள்நாட்டலுவல்கள் அமைச்சின் கேட்போர்கூடத்தில் நேற்று நடைபெற்ற மாவட்ட செயலாளர்/அரசாங்க அதிபர்களின் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரச நிறுவனமொன்றில் நியாயமான சேவையைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று மக்களுக்கு சிறிதும் நம்பிக்கை இல்லை என்றும், அரசு என்ற வகையில் முழுக் கட்டமைப்பும் சரிவைக் கண்டுள்ளதெனவும் தெரிவித்தார்.

சரிவடைந்திருக்கும், கட்டமைப்பை மீள உருவாக்க நாம் தயாரா? இல்லையா? என்பது குறித்து எம்மை நாமே கேள்வி கேட்டுக்கொள்ள வேண்டும் என்றும் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க வலியுறுத்தினார்.

மக்கள் [illegible] களுக்கு அரசியல் அதிகாரம் மட்டுமல்ல, அரச சேவையும் பொறுப்புக் கூற வேண்டும் என்பதையும் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க குறிப்பிட்டார். (ம-7)

## சுற்றுலாவுக்கான...

சுற்றுலாப் பயணிகள் பயணிப்பதற்கான சிறந்த நாடுகளின் பட்டியலில் இலங்கையும் இடம்பிடித்துள்ளது.

வெப்பநிலை, இயற்கை அழகுகள், கடற்கரைகள் உள்ளிட்டவற்றை இரசிப்பதற்காக பெருமளவான சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2025ஆம் ஆண்டு சுற்றுலாப் பயணிகள் பயணிப்பதற்கான சிறந்த நாடுகளின் பட்டியலில் பிலிப்பைன்ஸ் முதலாம் இடத்திலும், இத்தாலி இரண்டாம் இடத்திலும் பெயரிடப்பட்டுள்ளது. (ம-7)

## அரசியலமைப்பில்...

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

இலங்கையில் எண்ணெய்க் குழாய் அமைக்க இந்தியாவுடன் ஒப்பந்தம் செய்துகொண்டதாக செய்திகளை உருவாக்குவது உண்மைக்குப் புறம்பானது எனவும் அதானியின் திட்டம் தொடர்பில் நீதிமன்றத்தில் வழக்கு இருப்பதால் அது முடிந்த பின்னர் அதைப்பற்றி பேசலாம் என்று தெரிவித்த அமைச்சர் ஹேரத், 13 ஆவது திருத்த அமுலாக்கம் என்பன இலங்கையின் அரசியலமைப்புக்கு உட்பட்டே நடக்கும் எனத் தெரிவித்தார். (ம-7)

## புத்...

குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அதற்காக வேட்புமனுக்களை மீள அழைப்பது பொருத்தமானதாக இருக்கும் என ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

மல்வத்து மற்றும் அஸ்கிரி மகாநாயக்க தேரரை நேற்றுப் பிற்பகல் தரிசனம் செய்து ஆசீர்வாதம் பெற்றுக்கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"உள்ளூராட்சி மன்றத் தேர்தலை 2023ஆம் ஆண்டு மார்ச் மாதம் நடத்துவதற்கு வேட்புமனுக்கள் அழைக்கப்பட்டன.

ஆனால் அன்று இருந்த கட்சிகள் இன்று இல்லை. சில கூட்டணிகள் உடைந்துள்ளன. எனவே அந்த வேட்புமனுக்களை ரத்து செய்துவிட்டு புதிய வேட்புமனுக்களை அழைக்க வேண்டும் என்று நினைக்கிறோம். எனவே, கடந்த தினம் அமைச்சரவையில் தீர்மானம் ஒன்றை பெற்று, வேட்புமனுக்களை இரத்துச் செய்வது தொடர்பான சட்டமூலத்தை தயாரித்துள்ளோம்.

இது ஜனவரி மாதம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். அதன் பிறகு, மீண்டும் வேட்புமனுக்களை அழைத்து, உள்ளூராட்சி தேர்தலை நடத்துவதற்கு சித்திரைப் புத்தாண்டிற்கு முன்னர் நடவடிக்கை எடுக்கவுள்ளோம். அதேபோல், மாகாண சபைத் தேர்தலும் அடுத்த வருடத்தில் நடத்தப்படும் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (ம-7)


மஹஜன சம்பத
திகதி 2024.12.20
சீட்டிழுப்பு இலக்கம் 5691
G 8 5 9 0 4 2
அத சம்பத
G 9 0 4 2
சீட்டிழுப்பு இலக்கம் 266

தன நிதானய
திகதி - 2024.12.20
சீட்டிழுப்பு இலக்கம் - 1721
K 06 44 45 64 K
91392

மெகா பவர்
திகதி 20/12/2024
சீட்டிழுப்பு இலக்கம் 2039
B 05 19 47 74 80
177523

லக்கி 7 VIP
திகதி 2024.12.20
சீட்டிழுப்பு இலக்கம் 517
R 8 3 7 8 8 8 R

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3933
சீட்டிழுப்பு திகதி 20.12.2024
W 24 53 59 67
W 184067

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.12.20
சீட்டிழுப்பு இலக்கம் 1000
மிதுனம் 19 22 25 42 மிதுனம்
182185 22

உத்தியோகபூர்வ முடிவுகள்
20.12.2024 வெற்றி வாரம் 399
H 5 7 5 1 1 6
39703
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.27,587,171.60

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2665
சீட்டிழுப்பு திகதி 2024.12.20 தினம் வெள்ளிக்கிழமை
29 31 39 68 U
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.75,007,748.80

சனிதா
திகதி 20.12.2024 வெற்றி வாரம் 4826
03 45 63 74 X
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 61,025,546.00
24959

சசிரி
வெற்றி வாரம் 582
சீட்டிழுப்பு திகதி 20.12.2024
வெள்ளிக்கிழமை
11 31 40
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.200,000.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4377
சீட்டிழுப்பு திகதி 20.12.2024 தினம் வெள்ளிக்கிழமை
02 25 36 58 மிதுனம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,704,148.80
197142

P 02 06 10 17 18
சீட்டிழுப்பு வாரம் 1841
20.12.2024 வெள்ளிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.558,836,399.80

வெள்ளிக்கிழமை
வெற்றி வாரம்: 2491
சீட்டிழுப்பு திகதி: 2024.12.20
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.55,818,852.00
ADA KOTIPATHI
02 18 32 62 L
397739


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## வேலணை பிரதேச சபை ஏல விற்பனை அறிவித்தல்

வேலணைப் பிரதேச சபையின் அல்லைப்பிட்டி உப அலுவலக வளாகம் மற்றும் சாட்டிக் கடற்கரையிலுள்ள சவுக்கு மரக்கிளைகள் ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது.

இடம் :- அல்லைப்பிட்டி உப அலுவலகம் மற்றும் சாட்டி சுற்றுலா கடற்கரை

காலம் :- 23.12.2024 திங்கட்கிழமை.

நேரம் :- மு.ப.10.30 (அல்லைப்பிட்டி உப அலுவலகம்)

பி.ப.12.30 (சாட்டி சுற்றுலா கடற்கரை)

ஏலத்தில் கலந்து கொள்ள விரும்புவோர் குறித்த இடத்தில் உரிய கட்டணத்தை செலுத்தி ஏலத்தில் பங்குகொள்ளலாம்.

ஏலத்தில் சித்தியடைந்தோர் உடனடியாக பணத்தினைச் செலுத்தி உரிய அனுமதியுடன் அன்றைய தினமே மரக் கிளைகளை வெட்டி ஏற்றுதல் வேண்டும்.

தொடர்புகளுக்கு:- 021 2221 1505, 021 221 1506

செயலாளர்,
வேலணை பிரதேச சபை,

(C-1865)

## வாஸ் குணவர்...

இந்தத் தீர்மானத்தை அறிவிப்பதற்காக குறித்த வழக்கின் பிரதிவாதிகளான முன்னாள் பிரதி பொலிஸ் மா அதிபர் வாஸ் குணவர்தன, அவரது மகன் ரவிந்து குணவர்தன மற்றும் குறித்த வழக்கில் குற்றம் சுமத்தப்பட்ட ஐவரும் சிறைச்சாலை அதிகாரிகளினால் நீதிமன்றில் முன்னிலைப்படுத் தப்பட்டுள்ளனர்.

குறித்த தண்டனைக்கு எதிராக பிரதிவாதிகள் முன்வைத்த மேன்முறை யீட்டு மனுக்களை உயர்நீதிமன்றம் நிராக ரித்துள்ளதாக கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஆதித்ய பட்டபெந்திகே பிரதிவாதிகளுக்கு அறிவித்தார்.

இதன்படி, கொழும்பு மேல் நீதி மன்றத்தின் மூவரடங்கிய அமர்வினால் அவர்களுக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனையை உயர் நீதிமன்றம் உறுதி செய்துள்ளதாக பிரதிவாதிகளுக்கு நீதியரசர் ஆதித்ய பட்ட பெந்திகே தெரிவித்தார்.

பிரதிவாதிகள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி நீதிமன்றத்தில் சமர்ப்பணங்களை முன்வைத்ததுடன், பிரதிவாதிகளுக்கு விதிக்கப்பட்ட தண்டனையை நிறைவேற்றும் திகதியை உயர் நீதிமன்றம் தெரிவிக்கவில்லை எனச் சுட்டிக்காட்டினார்.

குற்றவாளிகள் ஜனாதிபதியின் மன்னிப்பை எதிர்பார்க்கும் பட்சத்தில் தண்டனையை நிறைவேற்றும் திகதி அவர்களுக்கு மிகவும் முக்கியமானது என சுட்டிக்காட்டிய சட்டத்தரணி, அதற்கமைய தண்டனையை நிறைவேற்றும் திகதி தொடர்பில் உத்தரவு பிறப்பிக்குமாறும் கோரிக்கை விடுத்துள்ளார். (ம-7)

## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள PPT எனும் நிறுவனத்திற்கு வேலையாட்கள் தேவை.

01. முகாமையாளர்
02. காசாளர்
03. அலுவலக உதவியாளர்
04. பேருந்து நடத்துனர்

077 386 6250
077 573 1318

(2804)

## பொங்கல் அகப்பை விற்பனைக்கு

தைப்பொங்கல் வியாபாரத்தை சிறப்பிக்க இன்றே முந்துங்கள்

- அகப்பைகள்
- விளக்குமாறு
- திருவுபலகை
- இருபலகை
- ரொட்டித்தட்டு



மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.
வியாபாரிகளுக்கு விசேட விலைக் கழிவு உண்டு.

077 2105 286

(2784)

## PREGNANCY VOUCHER

கர்ப்பிணித் தாய்மாருக்கான Voucher இற்குரிய பொருட்களை இப்போது Happy Super market உரும்பிராயில் கொள்வனவு செய்யலாம் (வலிகாமம் கிழக்கு பிரதேச செயலகம் - கோப்பாய் பதிவுள்ளோர் மட்டும்)

Happy Super market - உரும்பிராய்
077 780 8030

(653)

## முட்டை மலிவு விற்பனை

பிறக்கப்போகும் புது வருடத்தை முன்னிட்டு முப்பத்து நான்கு வருடப் பூர்த்தி. யாழ். நகரில் யாழ். முட்டை வியாபார நிலையமென இயங்கி வந்த கடை தற்பொழுது பெயர் மாற்றத்துடன் VS முட்டை விற்பனை நிலையமென மாற்றப்பட்டு முட்டை விலை 25/= (இருபத்தைந்து ரூபாய்) ஆகும். இதனை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

VS பாம் முட்டை, இல 2, நவீன சந்தை ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
077 6234 204, 021 222 4365

(2805)

## விசாக்கான (Show money)

வங்கி இருப்பு உறுதிப்படுத்தி தரப்படும்.

குறைந்த சதவீதத்தில்%

- Visit visa
- Student visa
- Fixed & saving

சகல நாடுகளுக்குமான விசா சேவைகள்
தொடர்புகளுக்கு :
075 033 6759

(629)

## V2 VISA SERVICES கனடா

077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets

- கனடா PASSPORT APPOINMENTS


விமான பயணச்சீட்டுக்கள்

- Student Visas
- Online Appointments
- இந்தியா Visas
- Online Visas - All countries
- Police Clearance
- Travel Insurance

Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு

(C-1865)

## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



## அமரர் சிதம்பரப்பிள்ளை தெய்வேந்திரநாதன்

கடந்த 22.11.2024 அன்று இறைபதமடைந்த எம் அன்புத் தெய்வம் சிதம்பரப்பிள்ளை தெய்வேந்திரநாதன் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 21.12.2024 சனிக்கிழமை இன்றைய தினம் காலை 5.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையில் இடம்பெற்று மதியம் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் சபிண்டீகரண கிரியைகள் நடைபெறும்.

அத்தருணம் இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று தாங்களும் வருகை தந்து 22.12.2024 ஞாயிற்றுக்கிழமை மதியம் 11.30 மணியளவில் நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி ஆலய திருமண மண்டபத்தில் நடைபெறும். அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

மேலதிக தொடர்புகளுக்கு:
தாட்சா :- 0777 586 094 (மகள்)
பிறேம் :- 076 280 5718 (மருமகன்) (C-1863)

தகவல் :
குடும்பத்தினர்

## Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | - 237/= | Max 3Kg |
| 1Kg Prima கோதுமை மா | - 159/= | |
| 01 5Kg Prima மா பை | - 920/= | 1150/= |
| 1Kg சிவப்பு பருப்பு | - 274/= | |
| 1Kg மஞ்சள் பருப்பு | - 390/= | |
| 1Kg பயறு | - 570/= | |
| 1Kg சிவப்பு கௌபி | - 650/= | |
| 1Kg உளுத்தம் பருப்பு No 1 | - 780/= | |
| 01 விஜிதா அரிசி 10Kg | - 2700/= | |
| 1Kg பொன்னி அரிசி | - 240/= | |
| 1Kg சம்பா(உள்நாடு) | - 240/= | |
| 1Kg கீரி சம்பா | - 255/= | |
| 1Kg வெள்ளைப் பச்சை அரிசி (உள்நாடு) | - 220/= | Max 1Kg |
| 01 டசின் தீப்பெட்டி | - 160/= | 240/= |

Kothmee 130/= 115/=



Max 01 990/= 400g Anchor 1050/=



தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு Facebook:- happy basket.lk இனை நாடவும்

பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி. (653)

Happy Supermarket
0777 8080 30

## விற்பனைக்கு

யாழ்ப்பாணத்தில் உள்ள Paint வர்த்தக நிலையத்தில் உள்ள Paint சம்பந்தமான பொருட்கள் மொத்தமாக விற்பனைக்கு உண்டு.

தள்ளுபடி 60%
தொடக்கம் 70% வரை

தொடர்புகளுக்கு: 071 389 4689

(C-1862)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.12.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.